

'எடிபல' ஓடி 'ஜயசிக்குறுய்' வரும்வரை
காத்திருந்ததாம் புலிப்படை

## கைத்தடியின் காலம் ?

றிவிறச; சத்ஜய; எடிபல
ஊர்புகுந்து குடிவிரட்டும் 'கைத்தடி'யின் பராக்கிரமங்கள்.
ஊன்வருந்த ஊன்வருந்த உயிரேந்தித் தெறித்தோடிய
கண்ணீரின் காலங்கள்.
ஆன்மாவைச் சுட்டெரித்து ஆறாப்புண் செதுக்கிய
சாத்தானின் வேதங்கள்.

பல காலங்களை வருடிய ஒருபெரு விருட்சத்தின் வேர்கள்
காதலாகி கசிந்துருகி மண்ணோடிழைந்த
தொப்புள்கொடியுறவைத் தொலைத்தன.

ஒரு தாயின் அரவணைப்பை
அவள் மடியின் மெல்லிய கதகதப்பை
பரிவுததும்பச் சுரந்தூட்டிய
முலையூறும் திருப்பாலின் சுவைமண்ணை
இழந்துருகும் நிலை சூழ்ந்தது.

கைத்தடியின் வெற்றுக் கலகலப்புகள்
வெற்றிகள் போல் தோற்றம் பண்ணின.
'சப்புமல் குமரையா' கைத்தடியாய் அவதரித்ததாக
மறைகழன்ற தலைகளெல்லாம் கதை பகிர்ந்தன.

சுவர்களுக்குள் உலகுசெய்து சுருங்கியிருந்த வாழ்க்கை
வீதிக்கு விரிந்து வெளிகளெல்லாம பரந்து
காடுகளை நிறைத்தது.
அவலங்களைத் தின்று கசப்பைச் சுவைத்தது.
கசப்பருந்திக் கசப்பருந்தி நொந்தழிந்த மானுடம்
விடுதலைப்பால் அருந்துகின்ற விருப்போடெழுந்தது.

ஆறாப்புண்ணடைந்த ஆன்மாவின் குரலெழுந்து
விடுதலைப்பாடலை வெறியெழப் பாடிற்று.

திக்குத் திக்காய் எரிந்த விடுதலைத் தீயெல்லாம்
கொத்தாய் இழைந்து குழம்பெறிந்து மிளாசிற்று.

கைத்தடியின் மகிமைக் காலத்திலேயே
அது உளுக்கத் தொடங்கியது.
பளபளப்பையும் மீறி அது படபடப்பது தெரிந்தது.
சூரியன் குளிர்ந்து விட்டதென்றும்
சூரியனைப் பிடிப்பது சிறுபிள்ளை விளையாட்டென்றும்
கைத்தடி உளறியது.

ஊரழித்துக் குடிகலைத்து அலுத்துளுத்த கைத்தடிக்கு
வீதி பிடிக்கும் விருப்பூட்டி விதியுலைத்தது.

'ஜயசிக்குறுய்'
வீம்பு முற்றிய சாத்தானின் வீதி பிடிக்கும் வேதம்.
மீளவழி ஏதுமற்ற வீதிவழி நீள்கிறது......
கைத்தடியின் காலம்!

– எஸ். உமாஜிப்ரான்


# விடுதலைப்புலிகள்

குரல்: 75 வைகாசி - ஆனி 1997 அன்பளிப்பு: 5/–


## வடபுலப் போரரங்கில் சிங்களத்துக்கு நெருக்கடி!

### 'ஜயசிக்குறுய்' துருப்புக்களுக்குப் பேரிழப்புகள்
### கடல்வழி வினியோகத்திற்கும் தடங்கல்கள்

# பாரிய சவால்களை எதிர்கொள்ளும்

# யாழ் குடாவுக்கான இராணுவ வினியோகம்

சிரமங்களுக்கு மத்தியிலும் தொடர்ந்த யாழ் குடாவுக்கான கடல்வழி வினியோகம் மேலும் சிக்கல்களைச் சந்திக்கின்றது. தரைவழிப்பாதை திறக்க ஆரம்பிக்கப்பட்ட படையெடுப்பும், எதிர்பாராதளவு பலத்த எதிர்ப்புக்கு முகம்கொடுத்து தாமதப்பட்டுள்ளது. இந்த வகையில் தமது ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டுக்கான சிங்கள அரசின் வினியோகம் பெரும் நெருக்கடியைத் தற்போது எதிர்கொண்டுள்ளது.

ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டிற்கான அரச வினியோகங்களை வழங்கி, படையினரின் இராணுவ நிர்வாகத்திற்கு உதவிபுரிந்து கொண்டிருந்த இரண்டு கப்பல்களை, சிங்கள அரசு, அடுத்தடுத்து இழந்துள்ளது. 01. 07. 1997 அன்று மன்னார்கடலில் ஒரு கப்பலை கடற்புலிகள் எரித்தழித்தனர். அடுத்து, 07. 07. 1997 அன்று வெற்றிலைக்கேணிக் கடற்பரப்பில் ஒரு சரக்குக் கப்பலை கடற்புலிகள் கைப்பற்றினர்.

இந்தக் கப்பல் அழிப்புகள் வடபுலப்படைக்கு பாரிய வினியோகப் பிரச்சினைகளைக் கொடுப்பதுடன் மட்டும் நின்றுவிடாது, அரசாங்கத்தின் பொருளாதாரச் சுமைகளை மேலும் அதிகரித்து விடும் என்பதும் நிச்சயம்.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள குடாநாட்டிற்கான அரசவினியோகங்ளை கடல் வழிமூலம் மேற்கொள்வதற்கேற்ற கப்பல்வளம் சிறீலங்கா அரசிடம் சொந்தமாக இல்லை. எனவே வெளிநாட்டுக் கப்பல் நிறுவனங்களுடன் உடன்பாடுகள் செய்து வினியோகப் பணிகளைச் சீராக்க சிங்கள அரசாங்கம் முயன்றது. அதாவது சிவிலியன் கப்பல்களை வாடகைக்கு அமர்த்தி – குடாநாட்டில் நடைபெறும் - இராணுவ நிர்வாகத்திற்கான அரச வினியோகங்களை மேற்கொள்ள அரசாங்கம் முயற்சிக்கின்றது. சாதாரண உடையணிந்து கடமைபுரியும் ஒரு இராணுவச் சிப்பாயைப்போல சிவிலியன் சரக்குக் கப்பல்களைப் பயன்படுத்தி, அரசாங்கம் தனது இராணுவ நலனைப் பூர்த்திசெய்ய எத்தனிக்கின்றது.

எனவே, ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கான வினியோகத்தில் ஈடுபட்டுவந்த சிவிலியன் சரக்கு கப்பல்களும் விடுதலைப் போராட்டத்தின் இராணுவ இலக்குகளே ஆகும். ஆகவே, ஆக்கிர →


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு



www.eelamview.com

# தரைப் பாதையின் போரியல் நோக்கம்

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி குடாநாட்டிற்கு ஒரு தரைப் பாதை சமைத்திட சிங்கள அரசு முயற்சிக்கின்றது.

'வெற்றி உறுதி' என்ற பெயரில் அதற்கான இராணுவ நடவடிக்கையையும் அது ஆரம்பித்துவிட்டது. ஓமந்தையூடாக புளியங்குளத்திற்கு அண்மையான சுமார் 14 கி. மீ நெடுஞ்சாலையை படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சுமார் 65 கி. மீ நீளமுள்ள இந்த நெடுஞ்சாலை முழுவதையும் இராணுவப் பிடிக்குள் கொண்டுவருவதன் மூலம் பாரிய இராணுவ நலன்களை அடைய சிங்கள அரசு ஆவல் கொண்டுள்ளது. அத்துடன் பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளும் இந்த நெடுஞ்சாலை கைப்பற்றப்படலில் அடங்கியிருக்கின்றது.

தமிழரின் ஆயுதப்போராட்டம் முனைப்புப் பெற்ற 83ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இருந்து இன்றுவரை குடாநாட்டுடனான தொடர்பை சிங்கள அரசு, பெரும்பாலும், இழந்துவந்திருக்கின்றது. அதேநேரம், வடபுலத்தை தனது ஆளுகை மண்டலத்திற்குள் கொண்டுவந்த புலிகள் இயக்கம் அங்கே, ஒரு நிழல் நிர்வாகத்தையும் – நிழல் அரசையும் ஏற்படுத்தியிருந்தது. சிங்கள அரசின் எந்த ஒரு அரசியல் அதிகாரமும் வவுனியாவுக்கு அப்பால் செல்லாக்காசாகவே இருந்தது. சிங்கள ஆட்சியாளர்களின் அரசவிஜயங்களும் வவுனியாவுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தன. அதுவும் 90ஆம் ஆண்டிலிருந்து குடாநாட்டிற்கான நேரடித்தொடர்பு முற்றுமுழுதாகவே அறுந்துகிடந்தது. இவைகாரணமாக, வடபுலம், குறிப்பாக, குடாநாடு ஒரு தனிநாடு என்ற மனப்படிமம் சிங்களவர் மனங்களில் படியத் தொடங்கியது. தீவு முழுவதும் சிங்களவருக்கே சொந்தம் என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாடு, இதனால் பெரும்பாதிப்பிற்கு உள்ளானது.

இத்தகைய புறச்சூழலிலேயே குடாநாட்டை ஆக்கிரமிக்க அரசு முடிவெடுத்திருந்தது. அந்த ஆக்கிரமிப்புச்சமரில் புலிகளை அழித்து மேற்குறித்த நிலைமைகளுக்கு முற்றுப்புள்ளியிட சந்திரிகா அரசு தீர்மானித்தது. படைபலத்தை ஒன்றுகுவித்து –பிரமாண்டமான அளவில் படைக்கல சக்தியைப் பயன்படுத்தி, குடாநாட்டை, தனது இராணுவப்பிடிக்குள் எடுத்தது. குடாநாட்டை ஆக்கிரமித்தபின்னும் அரசு எதிர்பார்த்ததுபோல – முன்னைய அரசியல் – இராணுவ நிலைகளில் பாரியமாற்றங்கள் நடைபெறவில்லை. மாறாக குடாநாட்டில் குவிக்கப்பட்ட பெரும்படைக்கான இராணுவ விநியோகங்கள் அரசுக்கு புதியதொரு சுமையாக மாறிவிட்டன.

குடாநாட்டிற்கான வான்வழிப்பயணம் முடங்கிப்போயுள்ள இன்றைய சூழ்நிலையில், கடல்வழிப்பாதை, சிரமமும்-அபாயமும் நிறைந்ததாகிவிட்ட இன்றைய நிலையில் ஒரு தரைவழிப் பாதை அரசுக்கு இன்றியமையாத் தேவையாகிவிட்டது. அதாவது, குடாநாட்டில் அகலக்கால் பரப்பி நிற்கும் இராணுவ பூதத்திற்கு ஒரு தொப்புள்கொடி அவசரமாகத் தேவைப்படுகின்றது. வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையை இராணுவத் தொப்புள்கொடியாகப் பயன்படுத்தி குடாநாட்டில் நிலைகொண்டுள்ள இராணுவ பூதத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்க அரசு விரும்புகின்றது. அதேவேளை. குடாநாட்டிற்கு நேரடித் தொடர்புகளை ஏற்படுத்தி தீவுமுழுவதும் சிங்கள ஆளுகைக்குள் வந்துவிட்டது என்று காட்டி பேரினவாதத்தின் அரசியல் அபிலாசைகளையும் நிறைவேற்ற அரசு துடிக்கின்றது.

நெடுஞ்சாலையைக் கைப்பற்றி இராணுவப் பாதை அமைப்பது சாத்தியமா? என்ற கேள்வி ஒருபுறம் இருக்கட்டும். பாதை அமைக்கப்பட்டால், அது தமிழினத்தின் வாழ்வை - தமிழர் போராட்டத்தை எவ்விதம் பாதிக்கும் என்று பார்ப்பது அவசியம்.

ஆட்தொகையிலும் – மரபுப்போர் ஆயுத வளத்திலும் அரசபடைகள் பலத்துடன் இருந்தாலும், தேவையானபோது அவற்றை விரைவாக ஒருங்குதிரட்டிப் பயன்படுத்த சிங்களப் படைத்துறைத் தலைமைக்கு, சில தடைகள் இருக்கின்றன. பூகோள நிலையும் – புலிகளின் பலமும்தான் அந்தத் தடைகள்.

குடாநாட்டில் ஒரு தொகுதிப்படை – மன்னாரில் ஒரு தொகுதிப்படை – கிழக்கில் ஒரு தொகுதிப்படை –சிங்கள தேசத்தில் ஒரு தொகுதிப்படை — என்று சிறிலங்காப்படை பரந்து கிடக்கின்றது. விரைவான ஒருங்கிணைப்பும், வேகமான நகர்வும் ஒரு படையின் வெற்றிக்கு மிக அவசியம். தமிழீழக்கடலும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளும் இந்த ஒருங்கிணைப்பிற்கும் – நகர்விற்கும் சவாலாக நிற்கின்றன.

வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையைக் கைப்பற்றி சிங்களதேசத்தை தரைவாயிலாக குடாநாட்டுடன் இணைத்துவிட்டால் மேற்குறித்த தடைகள் தகரும் என்று அரசு எதிர்பார்க்கின்றது. தேவைக்கேற்ப, இந்தப்பாதை வழியே வடக்கிற்கும் – வடக்கிற்கு வெளியேயும் துருப்புக்களை விரைவாக ஒருங்கிணைத்து – நகர்த்த படைத்தலைமைக்கு வாய்ப்பேற்பட்டுவிடும். இது, தமிழினத்திற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடிய ஒரு இராணுவ அம்சமாகும். தமிழரின் தாயக நிலப்பரப்பை கூறுபோட்டுச் சிதைக்கும் பேரினவாதநோக்கமும் இதில் அடங்கியுள்ளது.

இவ்விதம். தனது இராணுவ – அரசியல் நலன்களை வென்றெடுக்கும் நோக்குடன் அரசு பாதைதிறக்க முயலும்போது, கூட்டணியின் ஆனந்தசங்கரி போன்ற சில தமிழினத்துரோகிகள் அதை 'தமிழ்மக்களுக்கான வரப்பிரசாதம்' என்று திரித்துக்காட்ட முற்படுகின்றனர். வடபுலத்தின், விவசாய கடல்சார் உற்பத்திகள் தென்பகுதிக்கும், தென்பகுதியிலிருந்து இறக்குமதிப்பொருட்கள் வடபகுதிக்கும் அனுப்பி தமிழ் மக்களுக்கு நன்மைசெய்யவே பாதைதிறக்கப்படுகின்றது என்ற பாணியில் அவர்கள் பிரச்சாரம் செய்து பேரினவாதத்திற்கு வால்பிடிக்கின்றனர். இந்தத் துரோகிகளின் பிரச்சாரத்திற்கு வலுச்சேர்ப்பதுபோல ''குடாநாட்டின் அபிவிருத்திக்காக சீமெந்து போன்ற பொருட்களைக் கொண்டு செல்லவே தரைப்பாதை'' என்று அரசும் ஒத்து ஊதுகின்றது.

அன்று, சந்திரிகா அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையின்போது தமிழ்மக்களின் போக்குவரத்து வசதிக்காக, பூனகரி முகாமை அகற்றி, ஒரு தரைப்பாதை திறக்கும்படி கேட்டபோது அரசு அதற்கு மறுத்து விட்டது.

ஆனால், இன்று, பலநூற்றுக்கணக்கானோரைப் பலிகொண்டு – பல பத்தாயிரம் மக்களை இடம்பெயரவைத்து, குடாநாட்டிற்கு ஒரு பாதை அமைக்க, அதே அரசு செயலில் இறங்கியுள்ளது.

அன்று, பாதைதிறப்பை தனது இராணுவ நலனுக்கு முரணான விடயமாகப் பார்த்தது. இன்று, பாதைதிறப்பு அதன் இராணுவ நலனுக்கு அத்தியாவசியமான தேவையாகிவிட்டது.

ஆகவே, பாதைதிறப்பை குடாநாட்டு மக்களின் போக்குவரத்திற்கான ஊடகமாகப் பார்ப்பது மகாதவறு, பாதை அமைப்பு முயற்சி தமிழரின் தேசிய நலனுக்கு ஊறுவிளைவிக்கக் கூடியது. தமிழினத்தின் தேசியஇன அபிலாசைகளுக்கு இலக்குவைத்து வீசியெறியப்படும் சுருக்குக் கயிறாக பாதை அமைப்பைப் பயன்படுத்த அரசு முயலும் என்பதை தமிழினம் மறக்கக் கூடாது. ○

---

## பாரிய சவால்களை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிப்பின் ஒரு கருவியாகச் செயற்படும் இந்த விநியோகக்கப்பல்களை தமிழீழக் கடற்பரப்பில் வைத்து அழித்து - படைத்துறைக்கு நெருக்கடிகளை உண்டுபண்ணி – ஆக்கிரமிப்பிற்கு முடிவு கட்ட முயல்வது புலிகள் இயக்கத்தின் ஒரு போர் உபாயமாகும் அத்துடன், இது போராட்டத்தின் இன்றியமையாத் தேவையுமாகும்.

அதேநேரம் கப்பல்கள் மீதான இந்தத் தாக்குதல் சம்பவங்களை குடாநாட்டு மக்களுக்கு எதிரான ஒரு நடவடிக்கையாகச் சித்தரித்துக்காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

குடாநாட்டில் நிலைகொண்டுள்ள படையினரின் இராணுவத்தேவைகளை ஈடுசெய்வதற்கென கப்பலில் கொண்டுசெல்லப்படும் பொருட்களையும், இராணுவ உபகரணங்களையும் மறைத்துவிட்டு –மக்களுக்கான உணவுப்பொருட்களே கப்பலில் கொண்டுசெல்லப்படுவதாக அரசாங்கம், கூற விரும்புகின்றது. குடாநாட்டில் தரித்துள்ள இருபத்திஐயாயிரத்திற்கும் மேற்பட்ட படையினர்க்கான உணவு - மருந்து மற்றும் உதிரிப்பொருட்களுடன், இராணுவத் தேவைக்குப் பயன்படும் எரிபொருட்கள் – இராணுவப் பொருட்கள்– ஆயுதங்கள் – வெடிமருந்துகள் என்று பெருந்தொகை இராணுவ வளங்களை, கடல்வழிமூலம் அரசாங்கம – குடாநாட்டிற்கு அனுப்புகின்றது.

ஆக்கிரமிப்பிற்குள் இல்லாத தமிழர் பகுதிகளுக்கான அத்தியாவசியப் பொருட்களின் விநியோகங்களை திட்டமிட்டுத் தவிர்த்துவிட்டு, தனது கட்டுப்பாட்டிற்குள் உள்ள பகுதிகளுக்கு பொருட்களை விநியோகம் செய்யமுயலும் அரசின் தந்திரோபாயம் விளங்கிக்கொள்ளத் தக்கதாகும். படையினரின் இராணுவ நிர்வாகத்திற்குள் வாழும் மக்கள் அனைத்தையும் பெற்று -இயல்பு வாழ்க்கையை வாழ்கின்றனர் என்று உலகிற்கு காட்டி ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தவும் - மக்களுக்கான விநியோகம் என்ற போர்வையில் இராணுவத் தேவைகளையும் பூர்த்தி செய்து ஆக்கிரமிப்பைத் தொடர்வதுமே! அரசின் தந்திரமாகும். இந்த விநியோகத்தந்திரத்திற்கு விடுதலைப்போராட்டம் பலியாக முடியாது.

ஆக்கிரமிப்பிற்குள்வாழும் மக்களின் தேவைகளையும் – ஆக்கிரமிப்புப்படைகளின் இராணுவத் தேவைகளையும் ஒன்றாக இணைத்துச் செயற்படுத்த, அரசாங்கம், முயற்சிக்கின்றது. ஏனெனில், இராணுவ விநியோகங்கள் புலிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகும்போது அதை தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கையாக அர்த்தப்படுத்திக்காட்ட அரசாங்கம் எத்தனிக்கின்றது. இந்த நிலையில், புலிகளின் போராட்ட நடவடிக்கைகளையும் – அரசாங்கத்தின் நயவஞ்சக முயற்சிகளையும் - அன்புக்குரிய எமது மக்கள் – விளங்கிக்கொள்ளவேண்டும்.

குடாநாட்டிற்கான வான்போக்குவரத்து ஏற்கெனவே முடங்கிப்போயுள்ளதாலும் - சிரமத்தின் மத்தியில் நடைபெறும் கடல் போக்குவரத்து, இவ்விதம், அடிக்கடி நெருக்கடிக்குள்ளாவதாலும் ஒரு தரைப்பாதை அமைப்பதே! இந்த நெருக்கடிக்குத் தகுந்த தீர்வு என்று அரசாங்கம் எண்ணக்கூடும்.

புலிக்குகையின் மையப்பகுதியூடாக 65 கி .மீ நிலப்பாதை அமைத்து – குடாநாட்டு ஆக்கிரமிப்பைப் பாதுகாக்க அரசாங்கம் விரும்புகிறது. இந்த முயற்சியும் - அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட – இன்று, கடும் சிக்கலைச் சந்தித்துள்ளது.

ஒட்டுமொத்தத்தில், குடாநாட்டிற்கான இராணுவ விநியோகம் பலத்த சவால்களைச் சந்தித்துள்ளது. வடபுலத்தில் நிலைகொண்டுள்ள சிங்களப்படை எதிர்கொள்ளும் விநியோகப்பிரச்சனையானது தொடர்ந்தும், அதிகரித்தபடி செல்வதையே களநிலவரம் புலப்படுத்துகின்றது.

www.eelamview.com

# ஜயசிக்குறுய்: யதார்த்தங்களும் கற்பனைகளும்

வன்னிப் பெருநிலப்பரப்பிற்குள் மே13ஆம் நாள், இரு முனைகளுடாக இராணுவத்தைப் புகுத்திவிட்டு 'வெற்றி உறுதி' என்று எதிரி பெயர் சூட்டினான்.

இராணுவ நடவடிக்கைக்கு எதிரி சூட்டிய பெயரும் - பாதைதிறப்பது அதன் நோக்கம் என்ற அரசின் அறிவிப்பும் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்திவிட்டன.

பரபரப்பான பெயர்சூட்டல்கள் செய்தி ஊடகங்களுக்கு நல்ல தீனி. யதார்த்தம்புரியாத இராணுவத்தளபதிகளுக்கு அது ஒரு மகிழ்ச்சியான பொழுதுபோக்கு. அதேவேளை, பொதுமக்கள் மத்தியில் ஒரு உளவியல் சலசலப்பை உருவாக்கவும், சிலவேளை, அது உதவலாம். ஆனால் ஒரு விடுதலை இயக்கம் இத்தகைய பரபரப்பிற்கும் - சலசலப்பிற்கும் செவிசாய்க்கமாட்டாது. 'ஒப்பறேசன் லிபறேசன்' 'செக்மேற்' என்ற எதிரியின் மிரட்டல் பெயர்சூட்டல் வரிசையில் 'வெற்றி உறுதி'யும் வந்துள்ளது. இத்தகைய உளவியல் பெயர்சூட்டல்களைக் கண்டு எமது மக்கள் குழப்பமடையத்தேவையில்லை.

இந்தப் படை நடவடிக்கையின் முடிவு தொடர்பாக எதிரி மிகவும் நம்பிக்கையுடன் இருக்கின்றான் என்பதையே பெயர் சூட்டல் புலப்படுத்துகின்றது.

இந்தப் பெரு நம்பிக்கைக்கு ஆணிவேர் எது?



'றிவிரச' 'சத்ஜய' 'எடிபல' என்ற இராணுவப் புயல்களால் புலிப்படையின் இராணுவபலம் ஆட்டங்கண்டுவிட்டது என்ற அரசின் ஆய்வுமுடிவே அந்த ஆணிவேராகும். அத்துடன், மக்கள் ஆதரவு என்ற அரசியல்பூங்காவையும் புலிகள் இயக்கம் இழந்துவிட்டது என்ற அரசின் அனுமானிப்பும் அந்தப் பெருநம்பிக்கைக்கு வலுச்சேர்த்தது.

புலிகளின் இராணுவக் கட்டுப்பாட்டிலிருந்த கணிசமான பகுதி நிலத்தை கைப்பற்றிய ஒரு

→

## "எடிபல ஓடி ஜயசிக்குறுய் வரும்வரை காத்திருந்ததாம் புலிப்படை"

பல்வேறு நோக்கங்களை மனதில் வைத்தபடி நூற்றுக்கணக்கான இராணுவ நடவடிக்கைகளை அரசுப்படை நடாத்தலாம்.

- ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் அரசியல் ஆதாயத்திற்காக சில இராணுவ நடவடிக்கைகளை எதிரிப் படை முடுக்கிவிடும்.
- விடுதலைச்சேனையின் படைபலத்தை நுகர்ந்துபார்க்கும் அல்லது அதற்குப் பொறிவைத்திருக்கும் இராணுவ எண்ணங்களுடன் படை நடவடிக்கைகள் நடைபெறலாம்.
- கேந்திர முக்கியத்துவம் மிக்க நிலைகளை ஆக்கிரமிக்கும் எண்ணத்துடன் படை நடாத்தலாம்.
- புவியியல் முற்றுகைக்குள் அல்லது இராணுவ முற்றுகைக்குள் உள்ள தனது படைக்கான விநியோக வழியை ஏற்படுத்த சில இராணுவ நடவடிக்கைகளைச் செய்யலாம். அதாவது தனது படையின் உயிர் வாழ்தலுக்காகவே ஒரு படையெடுப்பு நடைபெறலாம்.
- இயற்கை வளத்தைக் கைப்பற்ற அல்லது பொருளாதார வளத்தை அழிக்க படையெடுப்பு நடக்கலாம்.

எனினும், குறித்த ஒரு இராணுவ நடவடிக்கை என்ன நோக்கத்திற்காக நடாத்தப்படுகின்றது என்பதை சரியான முறையில், விரைவாகப் புரிந்து - தீர்க்க தரிசனமான முடிவுகளை எடுப்பது போராட்டத் தலைமைகளின் கைகளில தங்கியுள்ளது. ஏனெனில், அனைத்து இராணுவ நடவடிக்கைகளையும் எதிர் கொண்டு போராடும் சக்தி - தனது உச்ச வளர்ச்சி நிலையை அடையும்வரை - ஒரு விடுதலைச்சேனைக்கு இருக்கமாட்டாது. எனவே, எதிர்த்துப்போராடவேண்டியதை இனங்கண்டு, எதிர்கொண்டு - மற்றையவைகளைத் தவிர்த்து - ஒதுங்கும் முடிவுகளை போராட்டத் தலைமைகள் எடுக்கும். எதிர்த்துப்போராட வேண்டிய படையெடுப்புக்களை எவ்வாறு எதிர் கொள்வது! எத்தகைய தந்திரோபாயங்களை பயன்படுத்துவது என்றும் அவை தீர்க்கமாக முடிவெடுக்கும்.

எதிரியின் திசைதிருப்பல் முயற்சிகளுக்கும் மத்தியில், படையெடுப்புக்களின் உண்மையான நோக்கங்களை கண்டறிவது இலகுவான காரியமல்ல. அப்படியும் இருக்கலாம! அல்லது இப்படியும் இருக்கலாம்! என்ற பாணியில் ஒரு விடுதலைச் சேனையின் தலைவன் முடிவெடுக்க முடியாது. ஏனெனில், படையெடுப்பை எதிர் கொள்ளப்போகும் விடுதலைச்சேனையின் தலைமைத் தளபதி அவர்தான். எனவே, ஊகங்களை அல்ல, முடிவுகளை எடுக்க வேண்டும். 'இதுதான் அதன் நோக்கம்' என்று உறுதியாக எதிர்வுகூறி - அதற்கேற்றவாறு செயற்படும் சிக்கலான பணி அந்தத் தலைமைக்கு உண்டு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் இந்தச் சிக்கலான பணியை, தலைவர் பிரபாகரன், வெகு கச்சிதமாக ஆற்றிவருகின்றார். இந்திய- சிங்கள படையெடுப்புக்களின் நோக்கங்களை - அதன் தன்மைகளை சரியாக உய்த்துணர்ந்து - விவேகமான முடிவுகளை எடுத்து எதிர்ப்பதை எதிர்த்து, தவிர்ப்பதை தவிர்த்து போராட்டத்தை வெற்றிப்பாதையிலேயே கொண்டு நடாத்துகின்றார்.

நூறிற்கும் மேற்பட்ட 'பல்வேறு நோக்கங்களைக் கொண்ட' இராணுவ நடவடிக்கைகளை புலிகள் இயக்கம் சந்தித்துவிட்டது. 1987 நடுப் பகுதியில் வடமராட்சி மீது நடாத்தப் பட்ட 'ஒப்பறேசன் லிபறேசன்' தமிழ் மக்களை மிரட்டிய முதலாவது இராணுவ நடவடிக்கையாகும். சரியாகப் 10 வருடங்களின் பின்னர் கடைசியாக 'ஜயசிக்குறுய்' மக்களை மிரட்டிக் கொண்டிருக்கின்றது.

இதில் இந்திய ஆக்கிரமிப்பின் தலைவிதியை நிர்ணயித்த 'செக்மேற்' முக்கியமான ஒன்று. இந்த நடவடிக்கையின் நோக்கத்தை இந்திய அரசு பகிரங்கமாகவே அறிவித்தது. இந்த நடவடிக்கையை எதிர்கொள்வதற்கு தலைவர் பிரபாகரனுக்கு இரண்டே இரண்டு தெரிவுகள் மட்டுமே இருந்தன. ஒன்று, சரணடைவது. இரண்டு, சாகும்வரை போராடுவது. தலைவர் இரண்டாவதை சந்திக்க முடிவெடுத்தார். களத்தை நேரடியாக வழி நடாத்தினார். வரலாற்றைப் படைத்தார்.

அதுபோல 'றிவிரச' என்ற யாழ்ப்பாணப் படையெடுப்பும் புலிகள் இயக்கம் சந்தித்த முக்கிய ஒரு படையெடுப்பாகும். குடாநாட்டின் புவியியல் சிறைக்குள் ஒரு மரபுவழிப்போரை நடாத்தி புலிப்படையின் ஆட்பலத்தை அழித்து - பெருந்தொகை மக்களையும் கொன்று- போராடினால் இதுதான் நடக்கும் என்ற பாடத்தையும் படிப்பித்து விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க அரசு முடிவெடுத்திருந்தது. சதி முறைகளால் பின்னப்பட்ட, எதிரியின் கோரமான தந்திரோபாய வலைக்குள் இருந்து - தலைவர் அவர்கள் - புலிப்படையின் ஆட்பலத்தையும் பாதுகாத்து, அதேவேளை, ஆக்கிரமிப்புப் படைகளுக்கு கணிசமான ஆள் இழப்பையும் ஏற்படுத்தி போராட்டத்தை உயிர்த் துடிப்புடன் வைத்திருக்கின்றார்.

அதேவேளை, மன்னார் பெருநிலப் பரப்பினூடாக 'எடிபல' செல்லத்தொடங்கிய போது அதன் நோக்கங்களையும், அந்த நோக்கத்தின் சாதக - பாதக விளைவுகளையும் ஆராய்ந்து பார்த்த தலைவர் அவர்கள், இறுதியில, 'எடிபல'வை போக அனுமதித்து - புலிவீரர்களை ஒதுங்கியிருக்கப் பணித்தார்.

ஆனால், இப்போது ஜயசிக்குறுயை படையினர் ஆரம்பித்தபோது, அதை வேறுவிதமாக எதிர்கொள்ள அவர் முடிவெடுத்தார். அதனுடைய பலாபலன்களை உலகம் காணத் தொடங்கிவிட்டது.

'எதிரியின் பலவீனத்தை அறி - ஓங்கி அதிலேயே அடி' என்பது தலைவரின் செயலமந்திரம். கொக்கின் குணத்தைப் போலவே ஓடுமீன்களை ஓடவிட்டு, தனது அலகு வீச்சுக்குள், தரித்துநிற்கும் [உறு] மீன்கள் வரும் வரை, கொக்கு [வாடி] காத்திருக்கும.

ஓடுமீன் ஓடி உறுமீன் வரும்வரையும் வாடியிருக்குமாம் கொக்கு - இது தமிழ்ப் பொன்மொழி -

'எடிபல' மீன் ஓடி 'ஜயசிக்குறுய்' மீன்வரும் வரை வாடி இருந்ததாம் புலிப் படை.

-இது புலிகளின் இராணுவப் பொன்மொழி.



www.eelamview.com

# 'ஜயசிக்குறுய்': யதார்த்தங்களும் கற்பனைகளும்

3 ஆம் பக்கத் தொடர்ச்சி

இராணுவ அம்சத்தையும் கைப்பற்றப்பட்ட குடாநாட்டிற்குள் ஒருதொகுதி மக்கள் திரும்பிச் செல்கின்றனர் என்ற ஒரு அரசியல் அம்சத்தையும் அளவுகோல்களாகப் பயன்படுத்தி படையியல்ரீதியில் புலிகள் தோற்கடிக்கப்பட்டனர் என்ற அரைகுறை மதிப்பீட்டையும் - தமிழ்மக்களின் ஆதரவை புலிகள் இயக்கம் இழந்து விட்டது என்ற பொய்யான முடிவையும் அரசு எடுத்தது. இவற்றின் அடிப்படையிலேயே பெரியதொரு இலக்கையுடைய பாரிய இராணுவ நடவடிக்கையை அரசு துணிந்து எடுத்தது.

இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகி மூன்று வாரங்களின் பின், ஜயசிக்குறுயின் வேலைகளில் ஒன்றாக தலைவர் பிரபாகரனைப் பிடிப்பது அல்லது கொல்வது என்ற தகவலை ரத்வத்த பகிரங்கப்படுத்தியிருந்தார்.

சிங்கள அரசின் பெயர் சூட்டலையும், ரத்வத்தவின் இராணுவ ஆசைகளையும் பார்க்கும்போது 1988-ம் ஆண்டு மணலாற்றுப்பகுதியில் தலைவர் பிரபாகரனை இலக்குவைத்து இந்தியப்படைகள் நடாத்திய 'செக்மேற்' இராணுவ நடவடிக்கை நினைவுக்கு வருகின்றது. சதுரங்க விளையாட்டின் இறுதிக்கட்டமான இராசாவை அழித்தலின்போது சொல்லப்படும் 'செக்மேற்' என்ற வெற்றிப்பிரகடனத்தையே இந்தியப்படைகளும் பெயர்சூட்டலுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தனர். அதேபோல, இப்போது, 'புலிகளின்கதை முடிகின்றது' என நினைத்துக்கொண்டு 'வெற்றி உறுதி' என நடவடிக்கைக்கு சிங்கள அரசு பெயர் சூட்டியது. ஆனால், செக்மேற்றின் விதி எப்படி முடிந்தது! செக்மேற் சொன்னவர்களே செக்மேற்றுக்கு ஆளாக்கப்பட்ட தலைகீழ் நிகழ்ச்சிதான் நடந்திருந்தது. அதே போன்றதொரு பேராசைப் பெயர்சூட்டலுடனும் அதீத எதிர்பார்ப்புக்களுடனும் சிங்கள அரசும் புறப்பட்டுள்ளது.

குடாநாட்டுப்படையினரின் இராணுவத்தேவையை ஈடுசெய்ய ஒரு தரைவழிப்பாதை அரசிற்கு இன்று அவசியம் தேவை. அதே அளவு அவசியம் அமைக்கப்படும் பாதை பாதுகாக்கப்படுவதாகும். புலிகளின் படைபலம் மேலும் நசுக்கப்படும்போதுதான் அந்தப் பாதுகாப்பு கிடைக்கும் என்று அரசு எண்ணுகின்றது. இந்த நிலையில், தரைப்பாதை திறக்கும் முயற்சியையும் புலிகளின் படைபலத்தைச் சிதைக்கும் வேலையையும் ஒரே எத்தனிப்பில் செய்யமுயலும் பேராசைத்தந்திரத்தை ரத்வத்த கடைப்பிடிக்கின்றார். அதனால்தான் எதிர்ப்பேதுமற்ற 'எடிபல' வை நிறுத்திவிட்டு வன்னியின் புவியியல் மையப்பகுதியை ஊடறுத்துச்செல்லும் வவுனியா - கிளிநொச்சி பாதையை கைப்பற்ற, ரத்வத்த குழுவினர் முடிவு செய்தனர்.

வவுனியா - கிளிநொச்சி பாதை அமைப்புமுயற்சி அபாயகரமானது என்று சிங்களதேசத்தின் அனைத்து ஆய்வாளர்களும் ஒரே குரலில் அரசை எச்சரித்துள்ளனர். ஆயினும், அவை அனைத்தையும் புறக்கணித்துவிட்டு, ரத்வத்த, பாதை திறப்பிற்கு உத்தரவிட்டார். அவரது முயற்சியை துணிச்சலானது என்று பேரினவாதிகள் வர்ணிக்கின்றனர். ஆனால், அது யதார்த்தத்தை அடித்தளமாகக் கொண்ட செயற்திறனுள்ள துணிச்சலா! அல்லது முட்டாள்த்தனமான தற்கொலைத் துணிச்சலா! என்பதை காலம் தீர்மானிக்கும்.

ஜயசிக்குறுயின் பிரதான இராணுவ இலக்கு பாததிறப்பு. ஜயசிக்குறுயின் பிரதான இராணுவ நோக்கம் புலிகளை சண்டைக்கிழுத்து அழிப்பது. அதனால்தான் 30 கி. மீற்றர்களை இடைத்தூரமாகக் கொண்ட இருவேறு முனைகளூடாக [ ஓமந்தை - நெடுங்கேணி ] படையினர் வன்னிப் பெருநிலப்பரப்பினுள் புகுந்துள்ளனர். திசைதிருப்பலுக்காக ஒன்றுக்கு மேற்பட்ட களங்களைத் திறப்பது படையினரின் வழமையான தந்திரம். ஆனால், ஜயசிக்குறுயின் இருமுனைகளும் இருபெரும் சண்டைக்களங்களாகவே திகழ்கின்றன.

பெரும்படைபல ஒருங்கிணைப்பு ஜயசிக்குறுயின் பலம். அபரிமிதமான ஆசைகொண்ட அதன் இராணுவ இலக்கு ஜயசிக்குறுயின் பலவீனம்.

சிங்களப்படையினரைப் பொறுத்தளவில் 'வெற்றி உறுதி' ஒரு 'இராணுவ மரதனோட்டம்' ஓமந்தையிலிருந்து - கிளிநொச்சிவரை ஏறக்குறைய 65 கி. மீ தூரத்தை அவை ஓடிமுடிக்கவேண்டும். அதேநேரம், ஓடியதூரத்தை பிடித்தும் வைத்திருக்க வேண்டும்.


விரிந்து – பரந்த வயல்வெளிகளூடாகச் செல்லும் தண்ணீர் வாய்க்கால்போல வன்னிப்பெருநிலப்பரப்பினூடாக ஜயசிக்குறுயின் இலட்சியம் ஓடிப்பாய விரும்புகின்றது. வயல்களுக்கு வாய்க்கால் உயிர் நாடி. அதனால், வாய்க்காலுக்கு வயல்கள்தான் காப்புக்கவசம். ஆனால், வடிவரீதியில் வாய்க்காலைப்போல அமையவிரும்பும் ஜயசிக்குறுய், இலட்சியத்திற்கு வயல்களைப்போல இருபுறமும் விரிந்து பரந்துள்ள பெரும் காடுகள்தான் எமனாக வந்துநிற்கப்போகின்றன.

பனிக்கநீராவிப் பகுதி மீது, அங்கிருந்த பீரங்கித் தளத்தைக் குறி வைத்து இன்னுமொரு ஊடுருவற் தாக்குதலை புலிகள் நிகழ்த்தினர். இந்தப் பெருஞ் சண்டையில், 185 வரையான படையினர் கொல்லப்பட்டதுடன் 100 பேர் வரையில் காயமடைந்தனர். 120 மில்லி மீற்றர் பீரங்கி ஒன்றையும், காவுவண்டியுடன் கூடிய பீரங்கி அடிப்பாகங்கள் நான்கையும், சிலநூறு எறிகணைகளையும், படை வாகனங்களையும், வேறு தளபாடங்களையும் புலிகள் கைப்பற்றினர். ஓமந்தைப் பகுதியிலிருந்த படையினரின் வெடிப்பொருட்களஞ்சியம் ஒன்றும், இதே தினம், புலிகளின் பீரங்கித் தாக்குதலினால் அழிக்கப்பட்டது.

இந்தவகையில், இதுவரை 1000 வரையான ஜயசிக்குறுய் படையினர் பலியாகியுள்ளனர்.

ரத்வத்த ஆசைப்படுவதுபோல வவுனியா – கிளிநொச்சி பாதை அமைப்பு சாதாரண விடயமல்ல.

இந்திய ஆக்கிரமிப்புக்காலகட்டத்தில் வவுனியா – ஆனையிறவுப் பாதைவழியே நடைபெற்ற அரச வினியோகங்களுக்கு ஆயுதப்பாதுகாப்பு வழங்க இந்தியப் படைகள் முயன்றன. எனினும், பாதை நீளத்திற்கு கைகோர்த்ததுபோல இந்தியப்படைகள் நிற்கவில்லை. வாரத்தில் ஒரிரு நாட்கள் – அதுவும் குறிப்பிட்ட சிலமணிநேரங்கள் மட்டும் பாதைப்பாதுகாப்பில் இந்தியத்துருப்புக்கள் ஈடுபட்டன. மற்றைய வேளைகளில் பாதை நெடுகிலும் ஆங்காங்கே இருந்த தத்தமது முகாங்களிலேயே தங்கியிருந்தனர். அந்தக்காலப்பகுதியில் வன்னிப்பெருநிலப்பரப்பில் சிலநூறு புலிவீரர்களே நிலைகொண்டிருந்தனர். இயக்கத்தின் மொத்த ஆட்பலமும் ஆயிரத்தைத் தாண்டாத நிலையிலேயே இருந்தது. இந்த நிலையில், மேலெழுந்தவாரியான பாதைப்பாதுகாப்பு இந்தியப்படைக்கு சாத்தியமாயிற்று. அத்துடன், அன்றையகால போராட்டநிலவரப்படி வினியோகப்பாதையை முற்றுமுழுதாக தடுத்து நிறுத்த வேண்டுமென்ற அவசியம் எழவில்லை. அதாவது, புலிகள் இயக்கத்தின் முக்கிய இராணுவ இலக்காக வினியோகப்பாதை இருக்கவில்லை.



'ஜயசிக்குறுய்' களத்தில் புலிகள் : இலக்குகளைத் தேடி

ஆனால், இன்றைய நிலைவேறு, புலிகளின் ஆட்பலமும், ஆயுதபலமும் கடந்த 10ஆண்டுகளில் பிரமாண்டமான வழர்ச்சியைப் பெற்றுவிட்டது. அதேநேரம், புலிவீரர்களின் போர்த்திறன் ஆச்சரியப்படும் அளவுக்கு உயர்ச்சி கண்டுள்ளது. அத்துடன் இன்றைய பாதை அமைப்பு முற்றுமுழுதான இராணுவநோக்கம் கொண்டது. இத்தகைய யதார்த்த நிலையில் வவுனியா – கிளிநொச்சி வரையான சுமார் 65 கி. மீ நீளமான இந்த நெடுஞ்சாலையை முழுமையாக ஆக்கிரமித்து அதை ஒரு தொடர் இராணுவ வலயமாக வைத்திருப்பது என்பது சாதாரண விடயமல்ல.

ஜயசிக்குறுய் நடவடிக்கையில் இருபதாயிரம் துருப்புக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அரசதரப்புச் செய்திகள் தகவல் தருகின்றன. பாதை திறப்பு நடவடிக்கை தொடங்கி ஒரு மாதகாலத்தில் ஓமந்தையிலிருந்து புளியங்குளத்திற்கு அண்மை வரையான 14 கி. மீ தூரத்தை அரசபடைகள் கைப்பற்றியுள்ளன. இதற்காக நடந்த ஒருமாத சண்டைகளில் குறைந்தது 350 படையினர் கொல்லப்பட்டு குறைந்தது 600 படையினர் காயமடைந்துள்ளனர் (நெடுங்கேணி சண்டை உட்பட).

இதேவேளை 10. 6. 97 அன்று ஜயசிக்குறுயின் கட்டளைமையப்பகுதி அமைந்திருந்த தாண்டிக்குளம் - நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது புலிகள் நடாத்திய தகர்த்தெறிந்து உள்நுழையும் தாக்குதலில் (Breack through) குறைந்தது 400 படையினர் பலியாக, சுமார் 570 வரையான படையினர் காயமடைந்தனர். இந்த விடிகாலை அதிரடித்தாக்குதலின்போது மட்டும் படையினரின் 3 ராங்குகள் அழிக்கப்பட்டன. அத்துடன் 3 ஆர்லறிகளையும் பெரும் வெடிப்பொருட் களஞ்சியங்களையும் படையினர் இழந்திருந்தனர்.

இதன் பின்பு, 24. 06. 97 அன்று ஜயசிக்குறுயின் முன்னணி நிலைகள் அமைந்துள்ள பன்றிக்கெய்தகுளம் -

1300ற்கும் மேற்பட்டோர் காயம்பட்டுவிட்டனர். எனவே மொத்தம் 2300 துருப்பினரை ஜயசிக்குறுய் படை இதுவரை இழந்துவிட்டது. ஜயசிக்குறுயின் மொத்த ஆட்பலத்தில் இது 11 சதவிதமாகும்.

அத்துடன், ஜயசிக்குறுயில் பங்குகொண்ட மொத்தப் படைக்கல வளத்தில் 10 ராங்குகளையும், 4 பீரங்கிகளையும், களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பெருந்தொகையான வெடிப்பொருட்களையும், பல இராணுவ வாகனங்களையும் படையினர் இழந்துவிட்டனர்.

ஜயசிக்குறுயின் நீளம் 65 கி. மீற்றர். இதுவரை அது ஏறக்குறைய 15 கி. மீற்றர்களை எட்டியுள்ளது. இது மொத்த இலக்கின் 25 சதவிதமாகும். 25 சதவித தூரத்தை கடப்பதற்குள் 11 சதவித ஆட்பலத்தை அது இழந்துவிட்டது.

'வெற்றி உறுதி' படையினர் இதுவரை சந்தித்த ஆள் – ஆயுத இழப்பு என்பது, படை நடவடிக்கையின் முடிவுதொடர்பாக ஆரம்பத்தில் இருந்த நம்பிக்கையை கேள்விக்குரியதாக்கிவிட்டது. படைவீரர்கள் மத்தியில் குழப்பத்தை ஏற்படுத்திவிட்டது. படைத்தளபதிகள் தங்களது திட்டங்களை மறுபரிசீலனை செய்யவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சிங்கள இராணுவ ஆய்வாளர்களும் அரசை நோக்கி எச்சரிக்கை வேட்டுக்களை பலமாகத் தீர்க்கத் தொடங்கியுள்ளனர்.

இவற்றின் அர்த்தம் ஜயசிக்குறுய் நடவடிக்கை இத்துடன் நின்றுவிடும் என்றல்ல. இன்றைய நிலையில் 'ஆப்பிழுத்த குரங்கின் கதையாக' ரத்வத்த இருக்கின்றார். நடவடிக்கையைத் தொடர வேண்டிய கட்டாயத்திற்குள் அவர் இருக்கின்றார். எனினும், இன்னும் சில 'தாண்டிக்குளங்களை' ஜயசிக்குறுய் படையினர் சந்திக்கும்போது 'யாழ்தேவி'யைப்போல ஜயசிக்குறுயும் காணாமல் போகலாம்.

வன்னியில் 'வெற்றி உறுதி' யை தொடர படைத்தளபதிகள் முயன்று கொண்டிருக்க, கிழக்குமாகாணத்தில் நடைபெறும் தனித்தனி பதுங்கித் தாக்குதல்களில் சிங்களப்படையினர் பலத்த ஆள் இழப்பைச் சந்திக்கின்றனர். ஜயசிக்குறுய் நம்பிக்கைக்கு இவையும் இடைஞ்சலாக இருக்கும்.

பண்டைய கிரேக்கத்தின் முதல் மரதனோட்ட வீரனான அந்தத் தூதன், தனது இலக்கை அடைந்து – சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வரலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஆனால் ஜயசிக்குறுய் மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப்போகின்றதா! அல்லது இடைநடுவிலே காணாமல் போகப் போகின்றதா? 'யாம் அறியோம் பராபரமே' O


www.eelamview.com

# ‘வெற்றி உறுதி’ இராணுவ நடவடிக்கை: என்ன நடக்கிறது?

கூட்டடக்கவசங்களையும்- குறுக்கும்நெடுக்குமான குச்சொழுங்கைப்பாதைகளையும்கொண்ட யாழ்ப்பாணச் சமர்க்களத்தைப் போலல்லாது, கவசங்களற்ற நிலப்பரப்பையும் - ஒரு சில பாதைகள் என்றில்லாமல் எதையுமே பாதையாக்கக் கூடிய தரை அமைப்பையும் உடைய வன்னிச் சமர்க்களம் தனித்துவமானது. சாதகங்களையும் - பாதகங்களையும் ஒருங்கே கொண்ட வித்தியாசமான மரபுப்போர் அரங்கம் இது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற உதவிய அதே மரபுப் போர்ப்பலம், வவு - கிளிநொச்சி பாதையைக் கைப்பற்றவும் கட்டாயம் உதவும் என்று படைத் தளபதிகள் கணித்திருந்தனர்.

பாதை இருமருங்கும் ராங்க்குகள் குண்டுகளைப் பொழிந்தபடி முன்னேற - பின்புலத்திலிருந்து ஆரில்லறிகள் எறிகணைகளை அள்ளி இறைக்க- மோட்டர் குண்டுகள் விழுந்துவெடிக்க, இவை அனைத்தும் ஒன்று சேர்ந்து, புலிகளையும் அவர்களது நிலைகளையும் உடைத்தெறிய- உடைந்த நிலைகளை நோக்கி நகரும் படையினரின் துப்பாக்கிகள் சண்டைகளுக்கு முற்றுப் புள்ளிவைக்க, யாழ்ப்பாணச் சமரைப்போலவே, ஜயசிக்குறுயும் வெற்றியில் முடியும் என்று சிங்களத் தளபதிகள் எதிர்பார்க்கின்றனர்.

சரியாக ஒருவருடத்திற்கு முன் நடாத்தப்பட்ட ‘சத்ஜய’ - உண்மையில் - ஆனையிறவு–வவுனியா பாதைதிறப்பின் ஆரம்பமுயற்சியாகும். முல்லைத்தீவில் படையினரின் தோல்வியை ஈடுகட்ட அவசரமாகச் செய்யப்பட்ட நடவடிக்கை அது என்றாலும், அதைத் தொடர விடாமல் சில இராணுவக்காரணிகள் தடையாக இருந்துவிட்டன.

ஆனையிறவுத் தளத்தைப் பின்தளமாகக் கொண்டு நடாத்தப்பட்ட ‘சத்ஜய’ சமரின் போது சிங்களப்படைகள், தமது விநியோகம் மற்றும் மருத்துவ விடயங்களில் பாரிய சிரமங்களைச் சந்தித்தன. குறிப்பாக, காயம் அடையும் படையினரை தென்பகுதி வைத்தியசாலைகளுக்கு கொண்டு செலவதிலும் - புதிய படைப் பிரிவுகளை தென்பகுதியிலிருந்து கொண்டு வருவதிலும் படைத்தலைமை படாதபாடுபட்டது. சிங்களக் கடற்படையும் - வான்படையும் அந்தப் பின்கள உதவிகளை (LOGISTICAL SUPP-ORT) தொடராக வழங்கக்கூடிய வகையில் இன்றில்லை.

எனவே இம்முறை சமரின் பின்களமாக வவுனியாவை படைத்தலைமை தேர்வு செய்தது. அங்கிருந்து ‘வெற்றி உறுதி’யை ஆரம்பித்தது. இதுவரை நடந்து முடிந்துள்ள நடவடிக்கையை மூன்று கட்டங்களாக வகுத்துப்பார்க்கலாம்: முதலாம் கட்டம, ஓமந்தையை – நெடுங்கேணியைக் கைப்பற்றல். இரண்டாம் கட்டம், ஓமந்தையிலிருந்து ரம்பைக்குளத்தைப் பிடித்து விளக்கு வைத்தகுளத்திற்கு முன்னேறல். மூன்றாம் கட்டம விளக்குவைத்த குளத்திலிருந்து பன்றிக்கெய்த குளத்தைப் பிடித்து பனிக்க நீராவி ஊடாக புளியங்குளத்தை நோக்கி முன்னேறல். இதேவேளை ஜயசிக்குறுய் படை நிலைகள் மீது புலிகள் இரண்டு பாரிய தாக்குதல்களையும தொடுத்துள்ளனர். ஆகவே, இதுவரை ஜயசிக்குறுயில என்ன நடந்துள்ளது என்பதை ஐந்து கட்டங்களாக இங்கே பார்ப்போம்.


## முதலாம் கட்டச் சண்டை

சாதாரண மரபுப் போர்த்தந்திரத்தையே ஜயசிக்குறுய் படைகளும தமது நகர்வுத்தந்திரமாகப் பயன்படுத்தின. துப்பாக்கி வீச்செல்லைகளுக்கு அப்பால் இருந்தவாறு புலிகளின் நிலைகளை நோக்கி சரமாரியான குண்டுத் தாக்குதல்களைச் செய்து – நிலைகளைச் சின்னாபின்னப்படுத்திவிட்டு - ராங்க்குகள் - கவசவாகனங்களின் துணையுடன் படையினரை அனுப்பி நிலைகளைக் கைப்பற்றுவதே அந்த நகர்வுத் தந்திரமாகும். அதேவேளை, இவ்விதம், மெதுமைப் படுத்தப்பட்ட இலக்குகளை நோக்கி சந்தடியற்ற நகர்வுகளையும் படையினர் தமக்கு வாய்ப்பான முனைகளில் பயன்படுத்த முனைந்தனர்.

13-05-97 அன்று ஜயசிக்குறுய் படைகள் இரு களங்களைத் திறந்தன. நொச்சிமோட்டைப் பகுதியூடாக ஓமந்தை நோக்கிய ஒரு களத்தையும், டொலர் – கென் பண்ணைப் பகுதிகளில் இருந்து நெடுங்கேணி நோக்கிய மற்றொரு களத்தையும் படையினர் திறந்தனர். முதல் நாள் சண்டை, படையினரின், எறிகணை வீதைப்பிலேயே பெரும்பாலும் கழிந்தது. இரண்டாம் மூன்றாம் நாட்களில் சண்டைகள் தீவிரமடைந்தன. ஓமந்தை முனையில், மூன்றாம் நாள் (16-05-97) இரண்டு ராங்க்குகள் அழிக்கப்பட்டன. ஓமந்தையைக் கைப்பற்ற பெருமுனைப்புடன் முன்னேறுவதும் – முடியாமல் பின்



‘ஜயசிக்குறுய்’ களம் :
யூன் 10 ஆம் நாள் தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை ஊடுருவற் தாக்குதலுக்கு முன்னதாக, தாக்கும் வழிமுறை பற்றி கலந்துரையாடும் புலிவீரர்கள்.




**களம் அசைந்த பாதை**
படை நகர்வும் எதிர்ச் சமரும்

www.eelamview.com

# ‘வெற்றி உறுதி’

# இராணுவ நடவடிக்கை

# என்ன நடக்கிறது!

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாங்குவதுமாக சண்டை இழுபட்டது. ஓமந்தை வீழ்ச்சி காணாத நிலையிலேயே அதைக் கைப்பற்றிவிட்டதாக அரசு அறிவித்தது.

சண்டையின் ஒரு அத்தியாயத்தை மூன்று நான்கு நாட்களுக்குள் முடித்து ஒரு வெற்றிச் செய்தியை சிங்கள மக்களுக்கு வழங்கவிரும்பிய அரசின் ஆசை ஈடேற, உண்மையில், இரண்டு வாரங்கள் சென்றன. ஓமந்தையையும், நெடுங்கேணியையும் கைப்பற்றிப் பலப்படுத்த நடந்த இந்த இருவாரச் சண்டையில் 125 ற்கும் மேற்பட்ட துருப்புக்கள் கொல்லப்பட்டிருந்தனர். 500 ற்கும் மேற்பட்டோர் காயப்பட்டிருந்தனர். அத்துடன் 4 ராங்க்குகள் அழிக்கப்பட்டன. மேலும் இரண்டு ராங்க்குகள் சேதமாக்கப்பட்டதால், அவை, களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன. ''புலிகளிடமிருந்து கடுமையான எதிர்ப்பை படையினர் சந்தித்துள்ளனா'' என பிரிகேடியர் தரத்தைக்கொண்ட ஒரு படை உயர்அதிகாரி தெரிவித்திருந்தார்.


புலிகள் ஏவிய எறிகணைகள் கொடுத்த தாக்கம்தான் இந்த சண்டைப்பரிமாண உயர்ச்சிக்குப் பிரதான காரணமாகும். முதல்முறையாக, சரமாரியான எறிகணை வெடிப்பிற்குள் நின்று புலிகளுடன் சண்டையிடவேண்டிய நெருக்கடிநிலை படையினர்க்கு எழுந்தது. இதனால், காயப்படும் படையினரின் வீதாசாரம் திடீரென உயர்ந்தது. ஒவ்வொருநாள் சண்டை முடிவிலும் நூற்றுக்கும் மேற்பட்ட படையினரைக் களத்தைவிட்டு வெளியேற்றவேண்டிய கட்டாயநிலை படைத்தலைமைக்கு ஏற்பட்டது. இது படையினரின் வேகநகர்வைப் பெரிதும் பாதித்தது. ஜயசிக்குறுயின் மந்தமான நகர்விற்கு பிரதான காரணம் இதுவேயாகும்.

## இரண்டாம் கட்டச் சண்டை

இதுவரைகாலமும் படைநடவடிக்கைகளுக்கு முகங்கொடுத்தது போலல்லாது, ‘வெற்றி உறுதி’யை புலிகள், வித்தியாசமானமுறையில் எதிர்கொண்டனர். முல்லைத்தளம் மற்றும் புளுகுணாவி முகாம் தகர்ப்புகளில் கைப்பற்றப்பட்ட ஆர்ட்லறிகள் மற்றும் மோட்டார்பீரங்கிகள் என்பன ஒரு குறித்தளவு மரபுப் போர்ப்பலத்தை புலிகள் இயக்கத்திற்குக் கொடுத்தன. இதனால் ஜயசிக்குறுய் சண்டைகள் வித்தியாசமான பரிமாணத்தில் நடக்கின்றன.

24.05.97 அன்று, இரண்டாம் கட்டமாக ரம்பைக்குளம் பகுதியைக் கைப்பற்றும் சண்டை உக்கிரம் பெற்றது. அன்றையதினம் இரு ராங்க்குகளும், ஒரு கவசத் துருப்புக்காவியும் அழிக்கப்பட்டன. 25ற்கும் மேற்பட்ட படையினரும் பலியாகினர்.

புலிகள் ஏவும் எறிகணைகளும் - கவச எதிர்ப்பு ஆயுதங்களும் ஜயசிக்குறுய் படையின் போர்வலுவைப் பெரிதும் பாதித்தன. ஆள் இழப்புகளும் - ராங்க் இழப்புகளும் தொடர்ச்சி



பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவிப் பகுதியில், ‘ஜயசிக்குறுய்’ படையெடுப்பின முன்னரங்கப் பீரங்கித் தளம் மீது, 24-06-1997 அன்று நிகழ்த்தப்பட்ட பெரும் ஊடுருவற் தாக்குதலில வீரச்சாவடைந்த,

லெப். கேணல் தனம் - ஐங்கரன்
*நாகலிங்கம் லோகராஜ்*
*முல்லைத்தீவு.*
*பிறப்பு :* 17-07-1971

யான நகர்விற்குச் சவாலாக எழுந்தன. இதனால், நகர்வுகளைச் சில நாட்களுக்கு நிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம்படைத்தலைமைக்கு எழுந்தது. இவ்விதம, சுமார் 10 நாட்கள் நகர்வுக்கான சண்டைகள் இல்லாது வெறும் எறிகணைத் தாக்குதல்களுடன் கழிந்தது. 3.6.97 அன்று மீண்டும் ஓமந்தை முனையிலிருந்து நகர்வுக்கான சண்டையை படையினர் ஆரம்பித்தனா. அடுத்த ஒரு சில நாட்களில், அடுத்து இருந்த வ்வைக்குவைத்தகுளம சந்திக்கு அண்மை வரை படையினர் நகர்ந்தனர். அங்கிருந்து, 6.6.97 அன்று பனிக்கநீராவி நோக்கி ஒரு திடீர் நகர்வை இராணுவம் செய்தது. அது புலிவீரரின் கடுமையான எதிர்ப்பிற்கு இலக்கானது. இந்தச் சண்டையில 20 படையினர்வரை பலியாகியிருந்தனர். 40ற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பெரியமடுப் பகுதியை கைப்பற்றிவிட்டதாக சிங்கள அரசு, பெரிய வெற்றிப் பிரச்சாரம் செய்தது.

வவு - கிளிநொச்சி பாதை அமைப்பதுபற்றி ஜெனரல் றத்வத்த இந்தக்கட்டத்தில் மீண்டும் வலியுறுத்தி அறிக்கை விடுத்தார். அடுத்ததாக புளியங்குளத்தைக் கைப்பற்றப் போவதாக படைத்தலைமை சூளுரைத்தது. புளியங்குளத்தைக் கைப்பற்றி, அதை ஒரு வெற்றி விழாவாகக் கொண்டாடி, ஜயசிக்குறுயின் முதலாம் அத்தியாயத்தை பூர்த்திசெய்யும் ஆவலில் படைத்தலைமை இருந்தது. ஏனெனில் ஆரம்பிக்கப்பட்டபோது இருந்ததைப்போலல்லாது, ஜயசிக்குறுய் அலை சிங்கள தேசத்தில் தணிந்துகொண்டு சென்றதால் அதை மீண்டும் உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கவேண்டிய அவசியம் அரசிற்கு எழுந்தது.


## நொச்சிமோட்டை - தாண்டிக்குளம் தாக்குதல்

புளியங்குளம் பற்றிய இராணுவ அபிலாசைகளுடன் படைத்தலைமை இருந்தவேளை, படையினருக்கு ஒரு பேரிடி தாண்டிக்குளத்தில் விழுந்தது. 10.06.97 அன்று தாண்டிக்குளம்-நொச்சிமோட்டைப் பகுதிகள் மீது உள்நுழைந்து தாக்கும் ஒரு அதிரடித்தாக்குதலை, புலிவீரர்கள், நிகழ்த்தினர். ஆக்கிரமிக்கப்பட்ட பாதைப் பகுதிமீது புலிகள் தாக்குவர் என்பதை படையினர் எதிர்பார்த்திருந்தனர். ஆனால் தாக்குதலுக்காக புலிகள் தேர்வு செய்த இடங்களை சிங்களத் தளபதிகள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஓமந்தையையும் அதற்கு வடக்காகவும் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்திருந்த படையினருக்கு வவுனியாவின் வாசலிலேயே அடி விழுந்தது அதிர்ச்சியூட்டும் தாக்குதலாய் அமைந்துவிட்டது.




‘ஜயசிக்குறுய்’ களம் :

யூன் 24 ஆம் நாள் பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவி ஊடுருவற் தாக்குதலின் போது, பீரங்கித் தளத்திலிருந்து புலிவீரர்களால் கைப்பற்றப்பட்ட 120 மில்லி மீற்றர் பீரங்கியும், அடித்தளத்துடனான காவுவண்டிகளும். →




‘ஜயசிக்குறுய்’ படையெடுப்புத் துருப்புக்கள் மீது நெடுங்கேணிப் பகுதியில் 15-05-1997 அன்று புலிகளால் மேற்கொள்ளப்பட்ட எதிர்த்தாக்குதலின்போது வீரச்சாவடைந்த,

லெப். கேணல் றாஜ் - அங்கதன்
*சிவசுப்பிரமணியம் இரத்தினகுமார்*
*யாழ்ப்பாணம்.*
*பிறப்பு :* 17-09-1974



‘ஜயசிக்குறுய்’ களத்திற்கான செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவேளை, கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் 30-05-1997 அன்று படையினரின் பதுங்கித் தாக்குதலில் வீரச்சாவடைந்த,

லெப். கேணல் சுகந்தன்
*கணபதிப்பிள்ளை உதயகாந்தன்*
*முல்லைத்தீவு.*
*பிறப்பு :* 26-08-1974



‘ஜயசிக்குறுய்’ களத்திற்கான செயற்பாட்டில் ஈடுபட்டிருந்தவேளை, புளியங்குளம் - பழைய வாடிப்பகுதியில் 12-05-1997 அன்று படையினரின் பதுங்கித் தாக்குதலில் வீரச்சாவடைந்த,

லெப். கேணல் பாக்கியராஜ் - வாசன்
*பாலச்சந்திரன் அழகேந்திரன்*
*வவுனியா.*
*பிறப்பு :* 07-06-1971


www.eelamview.com

ஜயசிக்குறுய் படையின் கட்டளைத் தலைமையகம் தாண்டிக்குளத்திலேயே அமைந்திருந்தது. சண்டைகளுக்குத் தேவையான வெடிப்பொருட்களும் – மருத்துவச்சாமான்களும் இந்தப் பகுதியிலேயே களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன, இந்த வகையில், ஜயசிக்குறுயின் நெஞ்சுப்பகுதியாக, அப்போது, தாண்டிக்குளம் விளங்கியது, நெஞ்சுக்கூட்டின்மீது, பாதையின் இருபுறமும் இருந்து ஊடறுத்து உள்நுழைந்த புலிகள் அதிர்ச்சித்தாக்குதல் ஒன்றை ஆரம்பித்தனர். இப்பகுதியில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த ஆரில்லறிக் குண்டுகள் – மோட்டர் எறிகணைகள் – ராங்க் குண்டுகள் என்பன ஜயசிக்குறுய் பூதத்தின் பிரதான உணவுகளாக இருந்தன. பூதத்தை பட்டினிபோட்டு அதன் இயக்கத்தை மந்தப்படுத்தும் தந்திரத்தைப் புலிகள் கடைப்பிடித்தனர். இந்தத் தாக்குதலில் பல்லாயிரம் எறிகணைகளும், பல நூறு ராங்க் குண்டுகளும் தீயில் அழிந்தன. பல இராணுவ வாகனங்கள் அழிக்கப்பட்டன. சில கைப்பற்றப்பட்டன. இதேசமயம் குறைந்தது 400 படையினர் கொல்லப்பட்டு, 570ற்கும் அதிகமானோர் காயம் அடைந்திருந்தனர். தாக்கு வலயத்திற்குள் சிக்குப்பட்ட படையினர்க்கு உதவ உலங்கு வானூர்திகளில் வந்திறங்க சிங்களக்கொமாண்டோக்கள் முயன்றனர். இந்த முயற்சியில் ஒரு 'எம். ஐ. 24' உலங்கு வானூர்தி கடும் சேதத்திற்கு உள்ளானது. ஓமந்தைப் பகுதிகளில் இருந்து உதவிக்கென நொச்சிமோட்




கைப்பற்றப்பட்ட 120 மில்லிமீற்றர் பீரங்கிக் காவு வண்டிகள்.

டைப் பகுதிக்குள் நுழைய முயன்ற படையினர் மீது தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் இரண்டு ராங்குகள் அழிக்கப்பட்டன. குறைந்தது 24 மணிநேரமாக தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதிகள் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தன.



'ஜயசிக்குறுய்' படையெடுப்புத் துருப்புக்கள் மீது நெடுங்கேணிப் பகுதியில் 15- 05- 1997 அன்று புலிகளால் மேற்கொள்ளப்பட்ட எதிர்த்தாக்குதலின் போது வீரச்சாவடைந்த,

லெப். கேணல் றத்தி
*கிருஸ்ணபிள்ளை சுபாஜினி*
*யாழ்ப்பாணம்.*
*பிறப்பு* : 30- 06- 1975



தாண்டிக்குளம் – நொச்சிமோட்டைப் பகுதியில் 'ஜயசிக்குறுய்' படையெடுப்பின் பின்னரங்கத் தளம் மீது 10- 06- 1997 அன்று நடாத்தப்பட்ட பெரும் ஊடுருவற் தாக்குதலில் வீரச்சாவடைந்த,

லெப். கேணல் நந்தா – இளமங்கை
*மோகனகுரு வசந்தமாலினி*
*யாழ்ப்பாணம்.*
*பிறப்பு* : 18- 10- 1973

ஜயசிக்குறுய் படைக்கு விழுந்த முதலாவது மரண அடியாக தாண்டிக்குளம் தாக்குதல் அமைந்து விட்டது. ''புலிகள் காடுகளுக்குள் ஓடிக்கொண்டிருக்கின்றனர்'' என்ற அரச பிரச்சாரத்தின் மத்தியில், தப்பிப் பிழைத்த தாண்டிக்குளப் படையினர் சிலர் தங்களை உருமாற்றி – சிவிலியன் உடையணிந்து – வவுனியாவுக்குள் ஓடிவர் என்று செய்திகள் வெளிவந்தன. இப்பெரும் தாக்குதலின் போது புலிகள் தரப்பில் மூன்று கரும்புலிகள் உட்பட 85 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

## மூன்றாம் கட்டச் சண்டை


தாண்டிக்குளம் தாக்குதல் ஜயசிக்குறுய் படையை, சுமார் இரண்டு வாரமாக நின்ற இடத்திலேயே முடக்கிவைத்தது. அழிக்கப்பட்ட வெடிபபொருள் வளங்களை மீளப்பெறவும், கொல்லப்பட்ட காயப்பட்ட படையினர்களுக்காக புதியவர்களை வரவழைக்கவும், தாக்குதலுக்குள்ளான பகுதிகளை பலப்படுத்தவும் இந்த இரண்டு வாரங்களைப் படையினர் பயன்படுத்தினர்.

புளியங்குளத்தை விரைவாகக்கைப்பற்றி 'தாண்டிக்குள' பரபரப்பைத் தணிக்க படையினர் விரும்பினர். புளியங்குளத்திலிருந்து ஒரு சில கி.மீற்றர் தூரத்திலேயே படையினர் நிலை கொண்டுள்ளதால் ஒரு சில நாள் சண்டையுடன் புளியங்குளத்தை பிடித்துவிடலாம் என்று படைத்தளபதிகள் எதிர்பார்த்தனர். இந்தநிலையில், அவசரம் அவசரமாக, படையினர் மூன்றாம் கட்டச் சண்டையை ஆரம்பித்தனர். 22. 06. 97 அன்று பனிக்கநீராவப் பகுதியில் இருந்து நகர்வை ஆரம்பிக்கமுயன்றனர். இந்தப் படைமுயற்சியைப் புலிகளின் பெண்கள் படையணி எதிர்கொண்டது. சண்டையில் ராங்க் ஒன்றைப் பெண்புலிகள் தகர்த்தழித்தனர். மேலும் இரு ராங்குகளைக் கடுமையாகச் சேதமாக்கினர். இதில், 15 படையினர்வரை பலியாகினர். இரண்டுநாட்கள் மட்டுமே நடந்த மூன்றாம் கட்டச் சண்டையை புலிகளின் இன்னொரு பாரிய தாக்குதல் இடைநிறுத்தியது.


## பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவித் தாக்குதல்

தாண்டிக்குளத்தில் தாக்குதல் நிகழ்த்தப்பட்டு சரியாக 14 நாட்களின்பின், கிட்டத்தட்ட அதே தாக்குதற் பரிமாணத்துடன் முன்னணிப் பகுதி மீது புலிகள் தாக்கினர். படையினரின் பீரங்கிப் படைப்பிரிவு அமைந்திருந்த பகுதி தாக்குதலின் பிரதான இலக்காகியது. இரவு முழுவதும் நடந்த தீவிரமான சண்டையின் விளைவாக


தாண்டிக்குளம் - நொச்சிமோட்டைப் பகுதியில் 'ஜயசிக்குறுய்' படையெடுப்பின் பின்னரங்கத் தளம் மீது 10- 06- 1997 அன்று நடாத்தப்பட்ட பெரும் ஊடுருவற் தாக்குதலில் வீரச்சாவடைந்த,



கரும்புலி மேஜர் சர்வதன் - நிதன்
*மாணிக்கன் அருள்ராஜா*
*மட்டக்களப்பு.*
*பிறப்பு* : 26- 01- 1970



கரும்புலி மேஜர் யாழினி
*சிவசுப்பிரமணியம் ராகினி*
*யாழ்ப்பாணம்.*
*பிறப்பு* : 05- 02- 1977



கரும்புலி கப்டன் சாதுரியன்
*நடராசா அரசரட்ணம்*
*மட்டக்களப்பு.*
*பிறப்பு* : 01- 01- 1977

www.eelamview.com



'ஜயசிக்குறுய்' களம்:

யூன் 24 ஆம் நாள் பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவி ஊடுருவற் தாக்குதலின் பின்பு, கைப்பற்றப்பட்ட பிரங்கித் தளத்திலிருந்து எறிகணைகளை அப்புறப்படுத்தும் புலிவீரர்கள்.

---

ஒரு 120 மி.மீ பீரங்கியை புலிகள் கைப்பற்றினர். அத்துடன், நான்கு பீரங்கி அடிப்பாகங்களையும், சிலநூறு எறிகணைகளையும் புலிகள் கைப்பற்றினர் - சுமார் 185 படையினர் பலியாகினர். 200 பேர் வரையில் படுகாயமடைந்தனர். புலிகள்தரப்பில் 90 போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

ஜயசிக்குறுயை ஆரம்பித்துவிட்டு வெற்றி எக்காளப்பிரச்சாரம் செய்த அரசிற்கு சண்டைகளில் ஏற்பட்ட திருப்புமுனைகளும், மந்த நகர்வுகளும் பெரிய தலையிடியைக் கொடுத்தன. வீதி அமைப்பு முயற்சியில் காற்பங்கைக் கூட எட்டாத நிலையில் ஜயசிக்குறுயின் ஆள்-ஆயுத பலங்களில் கணிசமான பகுதியை அது இழந்துவிட்டது. ஜயசிக்குறுயுக்காக சண்டை அனுபவம் வாய்ந்த சிப்பாய்களே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர். அத்தகைய முதன்மைப் படைவீரரின் இழப்பு என்பது சிங்களப்படையை உள்ளிருந்து அரிக்கும் புற்றுநோய் போல, சிங்களத்தின் படைவல்லமையை அரித்தெடுத்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

---

*புலிகளின் கதை முடிகின்றது என நினைத்துக்கொண்டு 'வெற்றி உறுதி' என நடவடிக்கைக்கு சிங்கள அரசு பெயர் சூட்டியது. ஆனால், 'செக்மேற்'றின் விதி எப்படி முடிந்தது. 'செக்மேற்' சொன்னவர்களே 'செக்மேற்'றுக்கு ஆளாக்கப்பட்ட தலைகீழ் நிகழ்ச்சிதான் நடந்திருந்தது. அதே போன்றதொரு பேராசைப் பெயர்சூட்டலுடன் அதீத எதிர்பார்ப்புக்களுடனும் சிங்கள அரசு புறப்பட்டுள்ளது.*

---

அபாயங்களுக்குள் புகுந்து விளையாடுபவர்கள்தான் போரில் அற்புத சாதனைகளைப் படைப்பர். ஆப்கானிஸ்தானின் கல்மலைகளையும், அரேபியாவின் மணல்வனங்களையும் நடந்து கடக்க அலெக்சாண்டர் தயங்கித் திரும்பியிருந்தால், ''மாவீரன்'' என்ற கதாநாயகப் பாத்திரத்தை வரலாற்றுக்கடவுள் அவருக்கு வழங்கியிருக்கமாட்டார். வான் வழியாக பல்லாயிரம் மைல் பயணம் செய்து 'எண்டபே' விமான நிலையத்தில் இறங்கி பணயம் வைக்கப்பட்டிருந்த தனது குடிமக்களை மீட்க இஸ்றேல் தளபதிகள் வரைந்த திட்டம் ஒருவகையில் அழகான சினிமாக் கற்பனை. ஆனால், அதை வாய்க்கெட்டிய பொருளாக இஸ்றேலிய வீரர்கள் சாதித்துக் காட்டினர். மாறாக, இடிஅமினின் வீரர்கள் இஸ்றேலுக்குள் புகுந்திருந்தால் அவர்களின் எலும்புகள் கூட உகண்டாவுக்குத். திரும்பியிருக்காது. போர் அற்புதங்களை யார் நிகழ்த்தத் துணிகின்றார்கள், யாருக்கு எதிராக அதைச் சாதிக்க முயல்கின்றார்கள் என்பது மிகமிக முக்கியம்.

இலங்கைத்தீவின் களநிலவரத்தின்படி வன்னியின் புவியியல் மையத்தைக் கோடு போட்டதுபோல ஊடறுத்துச் செல்ல விரும்பும் ஜயசிக்குறுய் முயற்சி கற்பனையா!? அற்புதமா!?

மரபுப்போர் வளங்களைப் பெறுவதில் இருபகுதிப் படைக்கும் சமவாய்ப்புகள் இருக்குமானால் ஜயசிக்குறுய் முயற்சி 65 கி.மீ நீளக் கற்பனையாகவே இருக்கும். எனினும், அரச படைகள் என்ற ரீதியில் சிங்கள இராணுவத்திற்கிருக்கின்ற படைபல அனுகூலங்கள் இச்சாதனையை நிகழ்த்த சிங்களத் தளபதிகளைத் தூண்டியுள்ளன.

ஜயசிக்குறுய் படைகள் இருவகையான சவால்களை புலிகளிடம் இருந்து எதிர்நோக்குகின்றனர். ஒன்று, நகர்விற்கான சண்டை. இரண்டு, நிலைகொண்ட படை மீது புலிகள் நடாத்தும் பெரும் தாக்குதல்கள். சுமூகமாக நடைபெறும் என்று எதிர்பார்த்த நகர்வுச் சண்டையே படைக்கு சிக்கலாகிவிட்டது. அதேவேளை, நிலைகொண்ட படையினர் மீதான தாக்குதலில், படைத்தரப்புச் சந்திக்கும் இழப்புகள் இவ்வளவு உயர்பரிமாணத்தில் இருக்கும் என்று அரசு எதிர்பார்க்கவில்லை.

எதிர்பாராத இடங்களிலும், எதிர்பாராத நேரங்களிலும் படையினர் தாக்கப்படுகின்றனர். தாண்டிக்குளம் தாக்குதல் எதிர்பாராத இடம்.


---

*பண்டைய கிரேக்கத்தின் முதல் மரதனோட்ட வீரனான அந்தத் தூதன், தனது இலக்கை அடைந்து - சேதியைச் சொல்லிவிட்டு வீழ்ந்து இறந்தான் என்று வாலாற்றாசிரியர்கள் தெரிவித்துள்ளனர். ஜயசிக்குறுய் மரதனோட்டம் தனது இலக்கைத் தொட்டுவிட்டு மரணிக்கப்போகின்றதா! அல்லது இடைநடுவிலே காணாமல் போகப் போகின்றதா?*

---

பன்றிக்கெய்தகுளம் - பனிக்கநீராவித் தாக்குதல் எதிர்பாராதநேரம். படைத்தரப்புக்கு ஆச்சரியமூட்டி - அதிர்ச்சிக்குள்ளாக்கி - அவர்களுக்கு பேரிழப்புக்களை வழங்குவது தலைவர் பிரபாகரனின் ஒரு போர் உபாயம்.

60 நாட்களுக்கும் மேற்பட்ட ஜயசிக்குறுய் சண்டையில் இதுவரை படைத்தரப்பு சந்தித்த ஆள் - ஆயுத இழப்பு என்பன, சாதாரண தொகையில் அமைந்திருக்கவில்லை. இதேபோல் ஜயசிக்குறுய் படைகள்,மேலும் இழப்புகளையும், அழிவுகளையும் சந்திக்கும் என்பது திண்ணம். ○




**தாண்டிக்குளம் - நொச்சிமோட்டை:**
**புலிகளின் தாக்குதல் வலயம்**

# கனவுக்குள் கரையாதே பகையே!
# நிமிருமெம் தேசம் நெருப்புக் குளிக்கும்




- வியாசன்

ஜனனம் -- களிப்புக்குரிய தென்றால் ..
மரணம் மட்டும் என்னவாம்
சாதகப் பறவையின் சங்கீதம் போல...
அதுவும் மகிழ்ச்சிக்குரியதே.

எஜமானர்களற்ற இருப்பே இனிமையானது.

அடிமைச் சீவியமே எமக்கானதென்றால்.
ஜனனமும் ஒன்றே.

மரணமும் ஒன்றே.

இது தத்துவமல்ல... சத்தியம்.

அன்னைமடியேறி வந்துளது அனற்காற்று.

பூமரங்கள் யாவும் பொசுங்க
வீசுகிறது விஷக்காற்று.

துடைத்தழிப்பேனெனத் துள்ளி
நடக்கிறது கூத்து.

உண்மைமுகங்களை உருமறைத்துவிட்டு
கண்களில் கருணைவழிவதாகக் காட்டுகிறது.

உலகெங்கும் ஒய்யார உலா.
இங்கே மட்டும் இரணியத் தர்பார்.

பூதகி பால் கொடுக்க வருகின்றாள்
நப்பாசையில் நம்பிவிடாதீர்.

முலைசுரப்பது பாலல்ல... விஷம்.



குடியெரித்துக் கொளுத்த
இடிஅமீன் சேலைகட்டி வந்துள்ளான்.

மாமன் வேரோடு மரங்களை விழுத்த
மருமகள் உழுதுவிதைக்க உரம் கொடுக்கின்றாளாம்.
வேடிக்கையான சோடிப்பு.

இவர்களுக்குச் சாமரம்வீச இங்கேயும் ஓரிருவர்.

வெள்ளைவான் கொள்ளைக்காரர்கள்
கொழும்புவிட்டு குடாநாடு வந்துள்ளனர்.

ஈரத்துணியோடு இரவில் உலவுகின்றனர்.
சோரம் போன சுந்தரிகள்,

ஓரவிழிகாட்டி உள்ளே அழைப்பார்கள்
யாரும் நம்பிவிடாதீர்.

பத்தாயிரம் கல்லறைகளிலெழும் பாடல்களையே
தொடர்ந்து பாடுங்கள்.

மோகினி ஆட்டத்தில் மெய்மறந்து விட்டால்
தூமணி மாடத்துச் சுடர்விளக்கு அணைந்துவிடும்.

விசர் பிடித்தலைகின்றன தெருநாய்கள்
கடித்துவிட்டு மருந்து கட்டும்.
கவனம்.

விடுதலையை ஏலம்போட்டு விற்பவர்கள்
மேடையேறி யுள்ளனர்.

குறைந்தவிலைக்கு இனிக்கூவி விற்பார்கள்

உயிர்கொடுத்துப் பெற்ற திருவிளக்கை
இவரழித்துப் போகவோ?

அரையில் உடுப்பும்;
அதற்குள்ளே மறைவுடுப்பும்
வெறும் திரைபோட்டு மறைக்கும் விவகாரமல்ல.
இது மானஸ்த்தன் சூடுகின்ற மகுடம்.
எச்சிலிலைக் காகங்களுக்கு... கச்சையெதற்கு?

வில்லேந்திய வீரக்குலத்தின் அடிமனதின்
உள்ளூறும் உணர்வின் ஊற்றடைத்துப் போமென்று
சொன்னது யார்?

சுரந்தூறும் எங்கள் மணற்கேணி.

விடுதலை:
இது எம் சுவாசக்குழலின் சுடுமூச்சு.

சுதந்திரம்;
இதயத் துடிப்பொவ்வொன்றும்பாடும் எக்காளப்பாடல்.

எமக்கில்லை யாயினும்
தலைமுறை யெனினும் தலைநிமிரட்டும்

அதற்கானதே எம் அணிவகுப்பு.

நிலவுலவும் வானத்தின் மீதும்;
நிமிர்ந்துள நெடிய பனைகளின் மீதும்,
தமிழனென்றெமை யீன்ற தாயவள் மீதும்
சத்திய மொன்றுரைத்தோம்.

சாலை யோரத்துப் பாலை மரங்களே!
முற்றித் திரண்ட முதிரை மரங்களே!
உறுதியொன்றெடுத்தோம் உம்மீது.

தளராதெம் படையணி.

பகைவரும் வழியெங்கும் புதைகுழிவெட்டி
புல்லின் வடிவிலும் புலிவீரரிருப்பாரென்பதை
இனிவரும் நாட்களில எதிரிக்குணர்த்துவோம்.

வதை சுமந்து சலிப்புற்றது எம்மண்.
காட்டுவாசிகளாயினர் எம மக்கள்.

அழகொருகாலம் அடைக்கலமிருந்த முகங்களெல்லாம்
ஒட்டியுலர்ந்து உருமாறிவிட்டன.

கற்கால மனிதர்களைப் போல... காட்சிப்பொருளாய்
வீதியோரங்களி லெல்லாம்
இன்றைய பொழுதுக்குத் தூங்கி
நாளைய நாட்களுககு ஏங்கி
தொல்குடியொன்றன் தொப்பிள் கொடி
துண்டாடப்பட்டுத் துடிக்கிறது.

இத்தோடாவது விட்டானா இடிவிழுவான்

குடிமனைக்குள்ளே எறிகணை அதிரும் போது
கருவறைகளே கலங்கிப் போகின்றன.

நட்சத்திரங்கள் கூட நடுங்குகின்றன.

மேகங்களுக்கு மூச்சுத் திணறுகின்றது.

நிலவு நெருப்புக் குளிக்கிறது.

வழியெங்கும் அமிலதாரை வழிகிறது.

ஊரெல்லாம் சாக்குருவியின் ஒப்பாரி.

பிணச்சோறுண்ணும் பிசாசுக்கு
இதுவும் போதாதாம்.
சென்றுவரத் தெருவொன்று தேவையாம்.

கொன்று குவித்துக் கூழ்காய்ச்சும் ஆசையில்
கண்டிவீதியிலும காலபதித்துள்ளது.

காற்றற்றுப் போனாலும்
நாங்கள் மூச்சுவிடும ஜாதியென்பதை
வரும் பகைக்குணர்த்தும் தருணமிது.

இளைய தலைமுறையே!
விழியில் நெருப்பேந்தி வீதியில் இறங்குக.

முரசு முழங்கட்டும்.

புனிதப் போருக்கு புதுரத்தம் பாச்சுவோம்.

பலமிழந்துன் பாதம் பணிவோமெனும்
கனவுக்குள் கரையாதே பகையே!

நிமிருமெம் தேசம் நெருப்புக் குளிக்கும்.
ஆயிரமாயிரம் அக்கினிக குஞ்சுகள் அவதரிக்கும்.

கொற்றவைத் தேவி! நின் கோயில் வந்தோம்

அற்புதம் நிகழ்த்த ஆசிகொடு தாயே!

வீரத் தேவி!
நீயே தமிழரின் காவற் தேவி.

ஆயிரம் கைகள்வீசி வீதியிலிறங்கி
அம்மையே! எங்கள் வெம்மை தணிவிப்பாய்.

சங்கெங்கே -
எடடா... ஊது...

பகை யெங்கே?
வாடா... காட்டு...

''வெற்றி உறுதி''யா ?
யாருக்கு?

o

www.eelamview.com

# 'றிவிறச'வுக்கு பின்னான போர் நிலைமை






புலிகள் இயக்கத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டு அதன் அடிப்படையில் இராணுவ நிலைமைகளை ஆய்வுசெய்து – அபிப்பிராயம் கூறுவதும், பின்னர், அந்த ஆய்வுமுடிவுகளுக்கு முரணாக படையினர்மீது – புலிகள் பாரிய தாக்குதலை நடாத்தியதும், அதை ஆச்சரியத்துடன் வாய்பிளந்து பார்த்து, அதற்காக அரசைக் கண்டித்துவிட்டு மீண்டும் வேதாளம் முருங்கை மரத்தில் ஏறியதுபோல புலிகளை குறைத்து மதிப்பிடுவதும் சிங்களதேசத்துப் பத்திரிகை உலகின் ஒரு பலவீனமாகும்.

குடாநாட்டை சிங்களப்படைகள் ஆக்கிரமித்த பின்னர், இந்தப் பலவீனமான அம்சம் சிங்களதேசத்தின் பொதுக் கருத்தாகவே மாறிவிட்டது. இதனால், 'போர்மூலம் தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பது' என்ற சந்திரிகா அரசாங்கத்தின் நிலைப்பாடு சாத்தியமான ஒரு விடயம் என்றே சிங்களமக்களும் நம்புகின்றனர்.

இந்தப் பொய்யான கருத்துப்பரப்புகையை எமது மக்களில் ஒரு பகுதியினர் உண்மை என நம்பி குழப்பமடைகின்றனர். இக்குழப்பத்தைத் தீர்க்க போர்நிலைமைகள் பற்றிய, குறிப்பாக, யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்ட பின்னான போர்நிலைமைகள் பற்றிய தகவல் ஆய்வுகளை இங்கே தருகின்றோம்.

படையினர் ஆக்கிரமித்துள்ளனர் என்பது வெளிப்படை. ஆயினும், இந்த ஆக்கிரமிப்பு முயற்சியின் எதிர் விளைவாக இப்போது – படையினர் முன்னரைவிட அதிகளவில் துருப்புக்களை பலிகொடுத்து வருகின்றனர் என்ற உண்மையையும் நாம் கண்டுகொள்ளலாம்.

சுமார் 15 வருடங்கள் நடந்த முதலாம் ஈழப்போரில் ஏறக்குறைய 1000 படையினர் பலியாகியிருந்தனர்.

குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் சந்திரிகா அரசு, தமிழர் பிரச்சனையை அரசியல்வழிமூலம் தீர்க்க முன்வரும் என்று நம்பிய சர்வதேச சமூகம் அது நடைபெறாததுகண்டு ஏமாற்றமடைந்துள்ளது. அதேவேளை, புலிகளின் ஆயுதப் போராட்டம தவிர்க்கமுடியாதது என்ற எண்ணமும் உலக அரங்கில் உணரப்பட்டுவருகின்றது.

இரண்டு நாட்டின் படைகள் மரபுவழிப் போர்முறையில் போரிடும்போது வெற்றி – தோல்வி பற்றி மதிப்பீடு செய்வது சுலபம். எந்தப்படை மற்றையநாட்டின் எல்லைக்குள் புகுந்து அதன் நிலங்களைக் கைப்பற்றுகின்றதோ! அந்தப்படை போரில் வென்று கொண்டிருக்கும் படையாக கருதமுடியும். இதில், பெருமளவுக்கு கருத்துபேதம் எதுவும் இருக்காது.

ஆனால், ஒரு விடுதலைச் சேனையும் ஒரு ஆக்கிரமிப்புப்படையும் போரிடும்போது ஆக்கிரமிப்புப்படையின் கட்டுப்பாட்டிற்குள் விடுதலைக்காகப் போரிடும் மக்களின் பெரும்பகுதி நிலம் அகப்பட வாய்ப்புகள் உண்டு. இந்த இராணுவ அம்சத்தை ஆக்கிரமிப்புப்படை பெற்றுள்ள வெற்றியின் சான்றாகக் கொள்ளமுடியாது. சிங்கள தேசத்து ஆய்வாளர்களும் – வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் இந்த இடத்தில்தான் பெருந்தவறு இளைக்கின்றனர். ஒரு விடுதலைச் சேனையானது உச்சபலத்தை அடையும்வரை, அதாவது, மரபுப்போர் ஆயுதங்களைப் பெற்று மரபுவழிப்படையாக மாறும்வரை நிலத்தை தனது பிடிக்குள் வைத்திருக்கும் விடயதில் பிடிவாதமாக இருக்கமாட்டாது. மாறாக, தனது படைபலத்தைப் பாதுகாப்பதிலேயே பிடிவாதமாக இருக்கும். அதேவேளை, எதிரியின் படைபலத்தை சிதைப்பதிலும் தீவிரம் காட்டும்.

அண்மைக்காலத்தில் சிங்களப்படை அடுத்தடுத்து நடாத்திய சில படையெடுப்புகளின் பயனாக புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த கணிசமானபகுதி நிலத்தை

4 வருடத்திற்கும் சற்று அதிகமாக நடந்த இரண்டாம் ஈழப்போரில் சுமார் 5000 படையினர் பலியாகியிருந்தனர்.

அதுபோல, 1995 ஏப்ரல் 19ஆம் திகதி ஆரம்பமாகி - இன்று வரை - சரியாக இரண்டு வருடங்களும் இரண்டு மாதங்களுமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் மூன்றாவது ஈழப்போரில் இது வரை 5500ற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டு விட்டனர்.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கி சரியாக ஒரு வருடகாலத்தில் ( 1995 ஏப் - 1996 ஏப் ) சிங்களப்படை குடாநாட்டை ஆக்கிரமித்தது.

குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டு, இப்போது, ஒரு வருடமும் இரண்டுமாதங்களும் பூர்த்தியாகியுள்ளன. இந்த 14 மாதப் போரில் மட்டும் சிங்களப்படை சுமார் 3800 பேரைப் பலிகொடுத்துள்ளது. அதாவது, ஓயாத அலைகள் நடவடிக்கையில் 1400 படையினரும், 'சத்ஜய'வுடனான எதிர்ச்சமரில் சுமார் 650 படையினரும், புளுகுணாவி முகாம் தகர்ப்பில் 50 படையினரும், பரந்தன் – ஆனையிறவு மீதான பெரும் தாக்குதலில் சுமார் 300 படையினரும், வவுணதீவு முகாம் தகர்ப்பில் சுமார் 150 படையினரும், ஜயசிக்குறுயிக்கு எதிரான சமரில் இதுவரை 1000படையினரும் பலியாகியுள்ளனர். இவை தவிர வடக்கிலும் – கிழக்கிலும் நடந்த பல்வேறு பதுங்கித்தாக்குதல் மற்றும் கண்ணிவெடித்தாக்குதல் சம்பவங்களில் 250ற்கும் மேற்பட்ட படையினர்வரை பலியாகியுள்ளனர். எனவே, மொத்தம் 3800 படையினர் குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்ட பின்னரான கடந்த 14 மாதங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

புலிகள் இயக்கத்திற்கும் சிங்களப்படைக்கும் இடையே நடைபெற்ற எந்த ஒரு ஒரு வருடப் போரை ஆய்வுக்காக எடுத்தாலும் - அவை எல்லாவற்றையும விட 1996 - 1997 ஐக் கொண்ட ஓர் ஆண்டுப்போரில் படையினர் சந்தித்த ஆள் இழப்பு மிக அதிகமாகும்.

படையினர்க்கு ஆள் இழப்புமட்டுமல்ல, குடாநாடு கைப்பற்றப்பட்டபின் நடந்த இந்த ஒரு வருடப் போரில் சிங்களப்படை சந்தித்த படைக்கல இழப்பு என்பது பிரமிப்பூட்டக்கூடியது.

குடாநாடு ஆக்கிரமிக்கப்பட்டபின் இதுவரை சிங்கள வான்படை 14 வான்கலங்களை இழந்துள்ளது. வான்கல இழப்புக்கு பல்வேறு காரணங்கள் தெரிவிக்கப்பட்டாலும், இந்தப் போராண்டில், அவை அழிந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. இத்துடன் 4 கடற்கலங்களை சிங்களக் கடற்படை இந்தக்காலப்பகுதியில் இழந்துள்ளது. அதேவேளை 16 ராங்குகளையும் (சத்ஜயவில் 4, பரந்தனில் 2, ஜயசிக்குறுயில் 10) மற்றும் 15 ஆரில்லறிகளையும் (ஆனையிறவில் 9, நொச்சிமோட்டையில் 3, முல்லைத்தீவில் 2, ( புளுகுணாவியில் 1 ) இப் போராண்டில் சிங்களப்படை இழந்திருந்தது. இதில் முல்லைத்திவு, புளுதுணாவி ஆரில்லறிகளை புலிகள் கைப்பற்றிஎடுத்தனர்.)

அத்துடன் குடாநாட்டு ஆக்கிரமிப்பிற்குப் பின்னர், புலிகள் இயக்கத்தின் மரபுவழிப்போர்ப்பலம் அதிகரித்துள்ளதையும் கவனத்தில் எடுக்கவேண்டும் ஆரில்லறி உபயோகமும் – 120 மி மீ மோட்டர்களின் பயன்பாட்டையும் புலிகள் இயக்கம் அதிகரித்தமை முக்கியமானதொன்றாகும்.

'ஆரில்லறிகள்தான் யாழ்ப்பாணச் சமரில் எமக்குப் பெரிதும் உதவின' என்று முன்னாள் இராணுவத்தளபதி ஜெரி - டி - சில்வா அன்று கூறியிருந்தார். அந்தப்பலம் ஜயசிக்குறுய் படைக்கு பெரிதாக உதவவில்லை. ஏனெனில், அதிலிருந்து பாதுகாப்புத்தேடும் சண்டைத்தந்திரோபாயங்களை, புலிவீரர்களுக்கு, தலைவர் பிரபாகரன் வழங்கியிருந்தார். அதேவேளை, ஜயசிக்குறுய் சமரில், புலிகளின் ஆரில்லறி - மோட்டர் பலம் பாரிய நன்மைகளை தமிழர்சேனைக்கு வழங்கின. படைத்தரப்பில் அதிகளவு சேதாரங்களை உண்டாக்க இந்த மரபுப்போர் ஆயுதங்கள் நன்றாகப் பயன்பட்டன.

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்குப் பின்னான போரில், சிங்களப் படையானது முன்னரே கூறியதுபோல 16 ராங்குகளை, 15 ஆரில்லறிகளை, வான்கலங்களை, கடற்கலங்களை, மற்றும் பலபத்தாயிரம் எறிகணைகளைக் கொண்ட பல களஞ்சியங்களை இழந்து, சிங்களப்படை, தனது

ஒரு விடுதலைச் சேனையும் ஒரு ஆக்கிரமிப்புப்படையும் போரிடும்போது ஆக்கிரமிப்புப்படையின் கட்டுப்பாட்டிற்குள் விடுதலைக்காகப் போரிடும் மக்களின் பெரும்பகுதி நிலம் அகப்படவாய்ப்புகள் உண்டு. இந்த இராணுவ அம்சத்தை ஆக்கிரமிப்புப்படை பெற்றுள்ள வெற்றியின் சான்றாகக் கொள்ள முடியாது.

சிங்களப்படைக்கு ஆள் இழப்பு-படைக்கல இழப்பு என்பனவற்றை உண்டுபண்ணிய விடயத்துடன் குடாநாட்டு ஆக்கிரமிப்பிற்குப்பிந்திய போர்ப்பரிமாணம் முற்றுப்பெறவில்லை. போர்த்திறனிலும் புலிவீரர்கள் அபாரவளர்ச்சியை பெற்றுள்ளனர். முல்லைத்தள அழிப்பு, பரந்தன் – ஆனையிறவு தளத்தாக்குதல், புளுகுணாவி, வவுணதீவு முகாம் தகர்ப்புகள், ஜயசிக்குறுய் படைக்கெதிரான சண்டைகள் என்பவற்றில் புலிவீரர்களின் போர்த்திறன் வளர்ச்சியை எழிதில் காண முடியும். தலைவர் பிரபாகரனின் நுட்பமான திட்டமிடலும், தாக்குதல் தந்திரோபாய ஆலோசனைகளும், சண்டைப் பயிற்சிக்கான அறிவுரைகளும்தான் இந்தப் போர்த்திறன் வளர்ச்சிக்குப் பிரதான காரணிகளாகும்.

படைக்கலசக்திப்பலத்தை ( FIRE POWER ) கணிசமான அளவுக்கு இழந்துள்ளது. இந்த உண்மையை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், புலிகள் இயக்கம் 3 ஆரில்லறிகளைக் கைப்பற்றி – 120 மி. மீ மோட்டர்களைப் பெற்று தமது படைக்கலசக்திப்பலத்தை அதிகரித்துள்ளனர்.

இதேவேளை ஆட்பல உயர்வில், ஆயுத தளபாட அதிகரிப்பில் சிங்களப்படை பெரிதாக எதையும் பெற்றுக்கொள்ளவில்லை. ஆனால் புலிகள் இயக்கம், ஆட்தொகை அதிகரிப்பில் மேன்மை கண்டுள்ளது. எதிரியிடமிருந்து ஆயுதவளங்களை

(11ஆம் பக்கம் பார்க்க)


www.eelamview.com

# நுணுக்குக்காட்டி

''நல்லூரில் கம்பன் கழக கட்டிடத்தை பிரபாகரனின் வீடு என்று தொலைக்காட்சியில் காட்டியது போல, நெடுங்கேணியில் கூட்டுறவுச் சங்க களஞ்சியத்தை புலிகளின் உணவுக்கிடங்கு என்று தொலைக்காட்சியில் காண்பித்தனர். மிகையான பிரச்சாரங்களில் காட்டும் ஆர்வம் போர்க்கள நிலவரங்களைவிடத் தீவிரமாக இருக்கிறது.''

- செய்தி
தினமுரசு 08 - 14 ஜூன் 97

''இலங்கையில் இன்றுள்ள நிலை தமிழர்களுக்கு பாதுகாப்பான ஒனறல்ல! இந்தச் சந்தர்ப்பத்தில் இங்குள்ள தமிழ்மககளை அனுப்புமாறு சிபாரிசு செய்வது ஐக்கிய நாடுகள் சபை இலங்கைக்கு செய்யும் சேவையாக இருக்க முடியாது. இலங்கை அரசுக்கு அந்நிய நிதியும், நிதி ஒதுக்கீடும் கிடைக்கும் வரை அது யுத்தத்தை நடத்திக் கொண்டேயிருக்கும்.''

- சாள்ஸ் அபேசேகர
சரிநிகர் 5 - 18 ஜூன 97

''இப்போதெல்லாம் புலிகளின் வானொலித் தொடர்பை இடைமறித்துக் கேட்டல் என்கிற தொடர், எல்லோருக்கும் மிகவும் அறிமுகமான வார்த்தையாகிவிட்டது. இதற்குக் காரணம் சிறுசண்டைகளிலும், சமர்களிலும் புலிகளின் இழப்பை உறுதிப்படுத்தும் மூலமாக பாதுகாப்பு அமைச்சால் அடிக்கடி இத்தொடர் பயன்படுத்தப்படுவதுதான். புலிகளின் இழப்பை மிகக் கூடுதலாகக் காட்டுவது தொடக்கத்தில் படையினருக்கு உற்சாக மூட்டுவதாக இருக்கக் கூடும். ஆனால், காலம் செல்ல இது அவர்கள் மத்தியில் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும். இதனை விடவும், 'மாவோ' சொன்னது போல, மக்களுக்காக மரணிக்கும் போராளிகளின் உயிரிழப்புக்களுக்கு அர்த்தம் உள்ளது; அதற்கு பெறுமதியுண்டு. எனவே பாதுகாப்பு அமைச்சின் எண்ணிக்கையைக் கேட்கும் வட-கிழக்கு வாழ் தமிழ் மக்கள், தமக்காகப் பெருமளவில் புலிகள் உயிரிழப்பதைப் பெரும் ஈகமாகக் கருதுவர். புலிகள் இயக்கத்தில் அவர்களை மேலும் இணைப்பதிலேயே இது கொண்டுபோய் விட்டுவிடும்''

- விங்கொமாண்டர் மார்க் செனவிரத்தினா
மிட்வீக் மிரர் 18 ஜூன் 97

''யாழ்ப்பாணத்தில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் ஆமை வேகத்திலே நகர்கின்றன. இதற்குக் காரணம் யாழ்ப்பாணத்திற்கு இன்னமும் ஒரு வினியோகப்பாதை இல்லாதிருப்பதே என அரச அலுவலர்கள் கூறுகின்றார்கள். இந்த நிலைமையில எந்தப்பணியையும் துரிதப்படுத்த முடியாது என்பது அவர்கள் நிலைப்பாடு. பெயர்குறிப்பிட விரும்பாத உயர் அதிகாரி ஒருவர் 'எல்லாவற்றையுமே, புனரமைப்பு பொருட்கள் உட்பட கப்பலிலேயே கொண்டு வர வேண்டியுள்ளது இது நடைமுறைக்கு சாத்தியமற்ற வேலை' என்றார்''.

- கிறிஸ்தோபர் காலேந்திரன்
சண்டேலீடர் 06 யூலை 97

''காணாமற்போனோரின்பெற்றோருக்கும் உறவினருக்கும் அரசு பதில் கூறியே ஆகவேண்டும். தமிழ்மக்கள் மீதான அடிப்படை உரிமை மீறல்கள் தொடர்ந்து வருகின்றன. விசாரணை என்ற பெயரில தமிழாகள் அழித்தொழிக்கப்படுகின்றார்கள். இதை கொழுமபு. கண்டி போன்ற இடங்களிலும் காணமுடிகிறது.''

''வடக்கில் யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். விடுதலைப்புலிகள் உலகில் முதன்மை வாய்ந்த கெரில்லா அமைப்பாக உள்ளனர். இதைப் புரிந்து கொண்டு அரசாங்கம் படைகளை வாபஸ் பெற வேண்டும். இல்லையேல் தாண்டிக்குளம், ஓமந்தைச் சமர்களில் பெற்றுள்ள இழப்புகளை விட அதிகமாகச் சந்திக்க வேண்டிவரும்.''

''சில ஆண்டுகளிற்கு முன் தெற்கில் ஜே.வி.பியை அழிப்பதாகக் கூறிக்கொண்டு 50000க்கு மேற்பட்ட சிங்கள இளைஞர்களைப் பலியெடுத்த அதே இராணுவ அதிகாரிகளே இன்று வடக்கில் நிலைகொண்டுள்ளனர். எனவே, இடம்மாறியுள்ளதே தவிர, செயற்பாடுகள் மாறவில்லை. இந்த நிலையில்,''மனித உரிமைச் செயலணிக் குழு' கலைக்கப்பட்டது எரியும் நெருப்பில் எண்ணை வார்க்கும் செயலைப் போன்றது.''

- கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின
நவ சம சமாச கட்சிப் பொதுச் செயலாளர்
ஈழநாடு 07 . 07 . 97

''எதிரியின் பலவீனமான முனையில் தாக்க வேண்டும் என்பது பகிரங்கமாகத் தெரிந்த கெரில்லா விதிதான். அதனை படையினரும் அறிவர். எனவே பலவீனமான முனையை கண்டறிந்தால் மட்டும் போதாது, எதிரி எதிர்பாராத இடத்திலும் அடிக்கவேண்டும். அதிலேதான் கெரில்லாத் தலைமையின் வழிநடத்தும் புத்திசாலித்தனம், நுட்பமான திட்டமிடல் என்பவை முக்கிய பாத்திரம் வகிக்கின்றன.''

''வன்னி நடவடிக்கையை முறியடிக்க புலிகள் எத்தகைய தந்திரோபாயங்களை வன்னிக் களத்தில் மேற்கொள்வர் என்று படையினர் எதிர்பார்த்தனரோ, அந்த எதிர்பார்ப்புகளுக்கு மாறாக, திட்டமிடுதலில்தான் பிரபாகரனின் கெரில்லாப்போர் அனுபவம் வெளிப்பட்டுள்ளது''

''புலிகளை 'நரிகள்' என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் கூறியிருந்தார். கெரில்லாப் போரில் பாய்ச்சல்களை புலிகளின் வேகத்துக்கும், எதிரியை ஏமாற்றும் திட்டமிடல்களை நரித்தந்திரத்திற்கும் ஒப்பிடுவது வழக்கம் என்பதால், அக் கூற்றை புலிகள் கௌரவக் குறைச்சலாக எடுத்துக் கொண்டிருக்க மாட்டார்கள். சவாலாகவே எடுத்திருக்கின்றனர் என்று தோன்றுகிறது.''

– நாரதர்
தினமுரசு 15 - 21 ஜூன 97

'சனியன் பிடித்த நாரை கெழுத்தி மீனை விழுங்கினாற்போல்' என்று பழமொழி இருக்கிறது. கெழுத்தி மீனை, கொக்கோ, நாரையோ, நீர்ப்பாம்போ விழுங்குவதில்லை. அதற்கு காரணம் கெழுத்தி மீனில் உள்ள வால்போன்ற முட்களும், அபார சக்தி வாய்ந்த செதில்களுமே. விழுங்கினால் ஆபத்து. துப்பவும் முடியாது, விழுங்கவும் முடியாது.

அந்த நிலையில் இன்றைய ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை இருக்கிறது.

- இரா. செல்வராஜ்
வீரகேசரி 29 ஜூன் 97

''கிட்லரின் இராணுவ அகந்தையே அவரது அழிவிற்குக் காரணமானது. 1937ஆம் ஆண்டு ஐரோப்பாவை வெற்றி கொள்வதற்கான தனது அபூர்வமான திட்டத்தை அறிவித்த போது, அதிர்ச்சியடைந்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்த— மரபு வழிப்போர் அனுபவத்தைக்கொண்ட – பல ஜெனரல்களை அவர் வீட்டிற்கு அனுப்பினார். இவர்களுள் ஃபீல்ட்மார்சல் பௌண் புறொம் பேர்க்கும் அடக்கம். அதுபோலவே, சோவியத்திற்குள் படையெடுக்கும் அவரது பேராசைத் திட்டத்திற்கு எதிர்ப்புக்காட்டியோரும் பதவி நீக்கப்பட்டனர். சோவியத் படையெடுப்பை மேலும் தொடர்வது மிகுந்த ஆபத்திலே போய் முடியும் என அறிவுறுத்திய ஒரு டசினுக்கு மேற்பட்ட ஜெனரல்களையும் கிட்லர்விரட்டினார். யதார்த்த நிலையை புரிய–இராணுவத்தளபதிகள் கூறியவற்றின் உண்மைகளை அறிந்து கொள்ள - கிட்லரின் இராணுவ அகந்தை இடம் கொடுக்கவில்லை. இதன் விளைவு, கிட்லரது ஆறாவது இராணுவமே ஏறக்காழ முழுமையாக சோவியத்திற்குள் அழிக்கப்பட்டது. இத்தோடு கதை முடியவில்லை. கிட்லரைக் கொல்வதற்கும் தளபதிகள் சதித்திட்டமொன்றை வகுத்தனர். யூலை 1944, பாதுகாப்பு மாநாடொன்றில் குண்டை வீசி அவரைக் கொல்ல எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது. இறுதியில், நேசப்படை அணிகள் 1945 ஆம் ஆண்டு மார்ச் 7ஆம் திகதி றைநல் நதியை கடந்தன. நெப்போலியனுக்குப் பிறகான இரண்டாவது ஆற்றுக் கடப்பு இது. ஏப்ரல 30, 1945 இல் கிட்லர் தனது அழிவைத் தானே தேடிக்கொண்டார்''

- விங்கொமாண்டர் மார்க் செனவிரத்தினா
மிட்வீக் மிரர் 02 ஜூலை 97

''இப்போதுள்ள நிலைமைகளின் படி ஜயசிக்குறுய் நடவடிக்கையின் முழு நோக்கங்களும் வடகிழக்குப் பருவ மழைக்காலத்திற்கு முன்னதாக அடையப்படமுயாது என்பது தெளிவாகின்றது. இதன் பொருள், இப்போர் அடுத்த வருடமும் நீடித்து, வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குத் தேவைப்படும் கால அவகாசத்தைக் கொடுக்கப் போகின்றது என்பது தான். ஆனால் அரசு எண்ணியதோ வேறு. ஜயசிக்குறுய் வெற்றியை அறுவடை செய்ய-தேர்தல் வரப்போகும் இரண்டு வருடத்திற்கு முன்னதாகவே – காற்றுள்ளபோது தூற்றிக்கொள்ளும் பாணியில் தனது அரசியல் வேலைத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்பது அரசின் எண்ணமாகஇருந்தது.

தற்போதுள்ள தேக்க நிலைமை ''போர் என்பது அரசியல் விரிவாக்கம்'' என்கிற குளோஸ்விட்சின் தத்துவத்தை நிரூபிக்கின்றது. மிகத் தெளிவான அரசியல், இராணுவ மூலோபாயத்தின் தேவையையே இது வலியுறுத்கின்றது. இப்போதாவது அரசும், ஏனையகட்சிகள் யாவும் ஒன்றுபட்டு செயற்படாவிட்டால், தவிர்க்க முடியாத துரதிஸ்ட சூழலில் போர் என்பது' அரசியல் பிச்சைக்காரனின் புண்போலாகிவிடும்''

– ஆசிரிய தலையங்கம்
சண்டேடைம்ஸ் 06 யூலை 97

''பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த றத்வத்தவைக் கேட்டால், யுத்தம் தொடரும் என்கிறார். அரசியல் அமைச்சர் பீரிஸைக் கேட்டால், அரசியல் தீர்வுக்கான நடவடிக்கைகள் தொடரும் எனகிறார், கதிர்காமரோ பேச்சு வார்த்தைக்கான கதவுகள் திறந்திருக்கிறது என்கிறார். எல்லாவறறிலும் மேலாக ஜனாதிபதி சந்திரிகாவோ, வெளிநாட்டில் பேட்டி கொடுக்கும் போது அரசு சமாதானப் பேச்சுக்குத் தயாராக உள்ளது என்றும், உள்நாட்டில் பேசும் போது சமாதானத்திற்கான யுத்தம் என்றும் மக்களைத் தலைசுற்றப்பண்ணிக் குழப்பி வருகிறார்கள்.''

''புலிகளுக்கு எதிராகத்தான் யுத்தம் செய்கிறோம் என்று சொல்பவர்கள், புலிகளின் அனுசரணையின்றி சமாதானம் ஏற்படப்போவதில்லை என்றும் கூறுகிறார்கள். இதுவே முரண்பாடான விடயம். ஆக, அரசு, போர் குறித்தும் தெளிவாக இல்லை; சமாதானம் குறித்தும் தெளிவாக இல்லை. ஆனால் புலிகள் மட்டுமே, தமது இலட்சியம். குறிக்கோள் குறித்து உறுதியாக உள்ளனர். அதனால் தான் அவர்களால் தொடர்ந்தும் உறுதியாகப் போராட முடிகின்றது.''

– முன்னாள் அமைச்சர் றொனி டிமெல்
ஈழநாடு 03 - 07 - 97

## றிவிறசவுக்கு பின்னான.

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைப்பற்றுவதிலும் அது சாதனைகளைப் படைத்துள்ளது.

இவ்விதம், குடாநாட்டு ஆக்கிரமிப்பிற்குப் பின் இராணுவரீதியில், புலிகள் இயக்கம், பல சாதக அம்சங்களை சாதித்துள்ள அதேவேளை, சில அரசியல் அனுகூலங்களும் தமிழர் போராட்டத்திற்கு ஏற்பட்டுள்ளது என்று துணிந்து கூறலாம். குடாநாட்டைக் கைப்பற்றிவிட்டு, தமிழரின் இனப்பிரச்சினையை அரசியல் வழிமூலம் தீர்க்க சந்திரிகா அரசு ஆவனசெய்யும் என்று நம்பிய சர்வதேச சமூகம், அது நடைபெறாததுகண்டு ஏமாற்றமடைந்துள்ளது. இது காரணமாகப் புலிகளின் ஆயுதப் போராட்டம் தவிர்க்கமுடியாத ஒரு அரசியல் முடிவே என்ற எண்ணமும் உலக அரங்கில், மெதுமெதுவாக, உணரப்படத்தொடங்கிவிட்டது.

எனவே சூரியக்கதிருக்குப் பின்னான போர்நிலைமையும் – அரசியல் நிலையும் தமிழரின் போராட்டத்திற்குச் சார்பான வகையிலேயே வளர்ந்து வருகின்றது என்பதை எமது மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

சிங்களப்படைகளின் கைகளில் யாழ்ப்பாணம் வீழ்ந்தது என்பது தலைவர் பிரபாகரன் கூறியது போல ''ஒரு தற்காலிகப் பின்னடைவு''தான். ஆனால், சிங்களப்படையின் சரிவு என்பது குடாநாட்டு ஆக்கிரமிப்புடன் அரம்பமாகிவிட்டது என்றே வரலாறு தீர்ப்புக் கூறப்போகின்றது. குடாநாட்டைக் கைப்பற்ற சந்திரிகா எடுத்த முடிவு ஒரு வரலாற்றுத்தவறு என்ற தலைவர் பிரபாகரனின் தீர்க்கதரிசனமே வரலாறாகப்போகின்றது. O

## போரின் அரசியல்...

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏறத்தாழ 190 ஆண்டுகளின் பின், இப்போது, கற்சிலை மடுவில் எதிரியின் எறிகணைகள் வீழ்ந்து வெடிக்கின்றன. விழுந்துபட்ட தமிழன் வரலாற்றினை எழுந்து படச் செய்ய தலைவனதும் போராளிகளினதும் பாதங்கள் இங்கே பதிகின்றன. எப்படிப்பட்ட அபூர்வ வரலாற்றுப் பொருத்தமிது. எனவேதான் உறுதியாகச் சொல்கிறோம் . காலக்கணக்கு இது தமிழரின் போரின் அரசியல் இது. ''பண்டாரவன்னியன் வீழ்ந்து பட்டான்'' என்கிற நடுகல்லுக் கருகே ''சிங்களப்படை இங்கே வீழ்ந்துபட்டது'' என்கிற நடுகல் நாட்டப்படும். ஏனெனில், புயலென, காட்டாற்று வெள்ளமெனச் சீறிப் பாயும் சிறப்புக் கரந்தடிப்படையான புலிகள், திடீரென தோற்றம் மாற்றி கனரக ஆயுதங்களை கனகச்சிதமாகப் பயன்படுத்தும் மரபுவழிப் படையணியாக மாறி விடும் இரட்டைப் பரிமாணம் கொண்டவர்கள் அல்லவா? நவீன அறிவியல் உலகையே பெரும் அதிசயத்துள் ஆழ்த்தியிருக்கும் சின்னஞ்சிறு சிலந்தியின வலைப் பின்னல் போல, வன்னியிலே அவர்கள பின்னுவது காப்பு வலைப் பின்னலல்லவா? ஆப்பிழுத்த குரங்கின் கதை மிகப் பழைய நீதிக் கதை, இப்போது மீண்டும் இம் மண்ணில் அக்கதை புதிப்பிக்கப் படுகிறது.

இறுதியாக போரின் அரசியல் பற்றி சிங்களவருக்கு புத்தர் கூறிச் சென்றது.இது தம்மபதத்தின் 18வது அத்தியாயத்தில் உள்ளது. ''போர்வெறி கொண்டவர்கள் தங்கள் வேரைத் தாங்களே அகழ்ந்தெடுக்கின்றனர்'' O

www.eelamview.com

# போரின் அரசியல்

**போ**ரே அரசியலாகிவிட்ட இன்றைய நிலையிலே போரின் அரசியல் என்றொன்று இருக்க முடியுமா? என்கிற கேள்வி எழுவது நியாயமானதுதான் ஆனால், இது கூட போரின் அரசியல் தான். மிக அபூர்வமான ஒற்றுமைத்தன்மை ஒன்றைக் கொண்டு, அதேவேளை, முற்றிலும் மாறுபட்ட, முரண்பட்ட திசையில் பயணிக்க விரும்பும் இரு தேசிய இனங்களின் போரின் அரசியல் இது 'போரேவேண்டாம்' என உலகம் முற்றும் உரத்துக் கூறுகையில் போரையே முதன்மைப்படுத்தி அதை நம்பியே தனது எதிர் காலத்தைத் திட்டமிடும் சிங்கள தேசம் இன்று என்ன செய்கின்றது? மின்னியல் ஊடகங்களை உலகம் நவீன அறிவியலின் உச்சத்தையெட்ட பயன்படுத்துகையில் சிறீலங்கா எதற்குப் பயன்படுத்துகின்றது? இப்போது அங்கு மின்னியல் ஊடகங்களில் முதன்மை நிலை வகிக்கும் 'ரூபவாகினி'யே போர்க்கோலம் பூண்டு விட்டது. மேலும் கீழும் மிகத்தடிப்பாக 'ஜயசிக்குறுய்' என எழுதப்பட்டு (கவனிக்கவும்-தமிழில் அல்ல) அதன் மத்தியிலே 'ராங்க்' ஒன்றில் குந்தியிருந்து சிங்களப் படை நகர்வது போன்ற ஒளித்தோற்றத்தின் பின்னணியிலஇராணுவ செய்திகள் யாவும் வடிகட்டப்பட்டு தேவையான வகையில் வடிவமைக்கப்பட்டு நாளாந்தம் சிங்களவர் நித்திரைக்கு போக முன்னர் ஊட்டப்படுகின்றன. சிங்கள தேசம வெற்றிகரமாகத் தமிழர் தாயகத்தினுள் படையெடுப்பை நிகழ்த்துகின்றது என்பதன் குறியீடு இது.

சந்திரிகா அம்மையாரின் பதவியேற்போடு, வரலாற்று ஓட்டத்திற்கு மாறாக சிந்திக்க வைக்கும மயகக மனநிலையொன்றில் சிங்களவரை உறைய வைப்பதற்கு அரசியல் வாதிகட்கு இருவழிகள் நிரந்தர



மாகிவிட்டன. ஒன்று, புலிகளுடனான போர் பற்றிய மிகைப் படுத்தப்பட்ட செய்திகள், காட்சிகளை தொடர்ந்து வெளியிடல்; இங்கு சிங்களப்படையால் கொல்லப்பட்டதாக கூறப்படும் புலிகளின் எண்ணிக்கை முக்கியம் பெறும். இரண்டு, சந்திரிகா அம்மையாரின் அரசியல் அணி போலாகி விட்ட சிங்களத்தின் துடுப்பாட்ட அணியின் பல்வேறு வெற்றிக்கிண்ண கோப்பைகளுக்கான தொடர் ஒளி பரப்புக்கள்; இங்கு சிறீலங்கா அணி பெறும் ஓட்டங்கள் முக்கியம் பெறும். கூர்ந்து நோக்கினால், இவை இரண்டு, வழிகளிலுமே சிங்களம் எப்படியேனும் வெல்ல வேண்டும் என்கிற பேராவல் – உளவியல் பரிமாணம் – கொண்டதொரு ஆழமான கருத்தோட்டம் சிங்களவரை பற்றி நிற்பதை அவதானிக்க முடியும்.

பல்லாயிரமாண்டுகால வரலாற்றினைக் கொண்டதாகக் கூறிக் கொள்ளும் சிங்களத்திற்கு இன்று வாய்த்திருப்பது அகே வரலாற்றின் விளைபொருளான இந்தத் தாழ்வுச் சிக்கல் தான். இதனையே – இந்த ஆபத்தான குணக்குறியையே – சந்திரிகா – றத்வத்த குழு வெகு நுட்பமாக பயன் படுத்துகின்றது. எனவேதான், துட்டகைமுனு–விகாரமாதேவி மீள் உருவாக்கம்; யாழ்ப்பாணத்திலே சிங்கக் கொடியேற்றம்; சப்புமால்புர. பெயர் மாற்றம்; முன்னைய சிங்கள மன்னரை நினைவு படுத்தும் றத்வத்தவின் செயற்பாடுகளின் தோற்றம் என்பன சிங்கள அரசியல் அரங்கிலே அரங்கேறுகின்றன. இப் போர் அரசியலை இன்னொரு வகையில் கூறினால் அது இப்படித்தான் அமையும். இப்போது வேறு தொழிலின்றி தந்தையாரின் 'லங்கா காடியன்' ஏட்டினைப் பொறுப் பேற்று நடத்தும் தயான் ஜெயத் திலக்க மிகுந்த மனக்கவலையோடு சில காலம் முன்னர் என்ன கூறியிருந்தார்? ''புலிகளுடனான போரில் சிங்களவர் தோற்றால்...? நினைத்துப் பார்க்கவே முடியாத விளைவுகளை இது ஏற்படுத்தும். இத்தோல்வி சிங்களவரின் உளவியல் உறுதியை வெகுவாக பாதித்து, அவர்களின் சமூக, பண்பாட்டு வாழ்க்கை முறையையே சிதைத்து



விடும்'' என்றார். எனவேதான் இப்போது மேற்கொள்ளப்படும் ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையானது முன்னைய சிங்கள மன்னர்களினது படையெடுப்புக்களின் மறுபதிப்பாகவும் அதேவேளை, இம்முறை வெற்றி நிச்சயம் எனவும் சிங்களவருக்கு கற்பிக்கப்படுகின்றது. அதாவது; உலகம் 21–ம் நூற்றாண்டை நெருங்கும் போது சிங்களம் 12-ம் நூற்றாண்டிற்கு பயணம் செய்ய விரும்புகின்றது. எத்தகைய முரண் இது?

இப் பயணத்தின் விளைவு - இப்போது வன்னி மண்ணிலே போரோசை உரத்தொலிக்கத் தொடங்கி விட்டது. எப்படிப்பட்டதொரு அவல

வாழ்க்கை மீண்டும் எம் மக்கள் மேல் திணிக்கப்படுகின்றது! வன்னி மண்ணிலே தொடரான பெரும் படை நகர்வுகளை மேற்கொண்டு எம் மண்ணின் பெரும் பகுதியை யாழ்ப்பாணத்தில் செய்தது போல– ஆக்கிரமித்து– தமிழ் மக்களின் நெஞ்சக் கூட்டிலே அகல் விளக்காகக் கனலும் விடுதலைத் தீயை கருக்கி விடலாம்; நிலப் பரப்புக்களை கைப்பற்றுவதன் மூலம் தமிழீழ மக்களின் மனப்பரப்பிலிருந்து புலிகளை அகற்றி விடலாம் என சிங்களம் எண்ணுகின்றது. எப்படிப் பட்ட அறியாமை இது? எப்படியாவது புலிகளை வென்றுவிட வேண்டும் என்கிற பேராசை



**தலைவரது போரின் வேர்களை, சிங்களம் இப்போது, சன்சூ முதல் மவோ, கியாப், சே வரை தேடிவருகின்றது. ஆனால், வரலாற்றுத்தாயால் பிறப்பிக்கப்பட்ட அவரது, போரின் அரசியலை இவர்களால் புரிந்துகொள்ள முடியுமா?**

றத்வத்தவை பேயாகப் பிடித்தாட்டுகின்றது.

ஆனால் வரலாற்றுத் தாயால் பிறப்பிக்கப்பட்டு, இயற்கையன்னையால் வளர்க்கப்பட்ட தலைவரின் போரின் அரசியலை இவர்களால் புரிந்து கொள்ள முடியுமா? எல்லாச் சோதிடர்களையும் அழைத்து, சுப யோகம் பார்த்து, பிக்குகள் பிரித் ஓதி, நூல்கட்டி, ஆசி வழங்க, மே 13-ஆம திகதி சுபவேளை அதிகாலை 05. 20 மணிக்கு தொடங்கப்பட்ட இராணுவ நடவடிக்கையின் இன்றைய நிலையென்ன? தாண்டிக்குளம்-நொச்சிமோட்டையில் தடாலடி, பன்றிக்கெய்தகுளம் - பனிக்க நீராவியில் பேரிடி என்றான பின்னர், தலைவரின் போரின் வேர்களைத் தேடி, சிங்களம் இப்போது சன்சூ தொட்டு மாவோ, கியாப், சே வரை தேடுதல் நடத்துகின்றது. தேடிப் பிடித்து 'சன்சூ' சொன்ன உத்தியொன்றை மேற்கோள் காட்டுகின்றது. ''எல்லாப் போர்களும் ஏமாற்றுதல் என்பதனையே அடிப்படையாகக் கொண்டவை. எதிரியை தாக்க முடியும் என்கிற போது தாக்க முடியாதவன் போலிரு; உனது பலத்தை

## நிலப்பரப்புக்களை கைப்பற்றுவதன் மூலம், தமிழீழ மக்களின் மனப்பரப்புகளைக் கைப்பற்றலாம் என்பது சிங்களத்தினது போரின் அரசியல்.

காட்ட முடியும் என்கிறபோது இல்லாதவன் போலிரு; நெருங்கும் போது தொலைவிலிருப்பவன் போல் தோற்றம்காட்டு; பலவீனப் பட்டவன் போலிரு; அப்போது எதிரி அகந்தையின் உச்சிக்கே செல்வான், அப்போது எதிரியை இரையைக் காட்டி ஈர்த்து இழு, இறுதியில் நசுக்கிவிடு. இவையே வெற்றிக்கான உறுதியான வழிகள். ஆனால் எப்போதும் உச்சஇரகசியம் பேண்'' இதனை யார் சொன்னது? சன்சூவா? பிரபாகரனா? சிங்களம் குழம்புகின்றது. பொருத்தமான இராணுவத் தலைமை இப்போதுதான் பொருந்தி வந்தது எனக் கூறிய அதே வாய்கள், குறுகிய சந்தர்ப்பவாத அரசியல் நோக்

கத்திற்காக தளபதிகளின் எச்சரிக்கையைக் கேளாமல் றத்வத்த நடத்தும் போரிது என்றும், தனிப்பட்ட ஒருவர் பட்டங்கள் பெற போரை நடத்துவதா? என்றும் பொருமுகின்றன. இது சிங்களத்தின் நிலை.

இனி, தமிழீழத்தின் போரின் அரசியலுக்கு வருவோம். விடுதலைப் போராட்ட வரலாற்றிலே தீர்க்கமான சமர் ஒன்றைச் சந்திக்கும் பெரும் பொருதுகளமாக மாறிவிட்ட வன்னிமண், விரைவில் பெரும் திருப்பு முனையை ஏற்படுத்திய மண்ணாக விதந்து பாராட்டப்படப் போகின்றது. இவை வெறும் வெற்று வார்த்தைகளல்ல; பல்லாயிரமாண்டுகால வரலாற்றின் விளைபொருள் தான் இதுவும். இது தாழ்வுச் சிக்கலல்ல; தாழந்த இனமொன்று தலை நிமிரவேண்டிய சிரின்சிக்கல். ஐதீகங்

வே, பாலகுமாரன்

களோ, கற்பனைக்கோட்பாடுகளோ கற்பிதங்கள் ஆக்கப்படவில்லை. யாதார்த்தம் இது. எவ்வாறு என எவரும் வினவலாம்? சில வரலாற்றுக் குறிப்புகளை வேகமாகப் பார்க்கலாம்! கிறிஸ்துவிற்கு முற்பட்டகாலத்திலே வன்னியில் சிற்றரசுகள் இருந்தன. யாழ்ப்பாண அரசு எழுச்சிபெற முன்னரே வன்னியில் வன்னிமைகள் இருந்தன. இவை அனுராதபுர அரசின் எழுச்சியோடு தளர்வடைந்தன. இத்தகைய வன்னிமைகளில் தற்போதைய வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார், மாவட்டங்களை உள்ளடக்கிய அடங்காப் பற்று வன்னிமைகள் முக்கியம் பெறுகின்றன ... அடங்காப்பற்று வன்னிமைகளில் பனங்காமம், முள்ளியவளை வன்னிமைகள் வன்னி மண்ணின்சுதந்திரத்தை காப்பாற்ற முக்கிய பங்களிப்பு செய்தன...... கோட்டை இராச்சியமும், யாழ்ப்பாண இராச்சியமும் அன்னியரால் அடிமைப்படுத்தப்பட்ட பின்னரும் வன்னி இராச்சியங்கள் சுதந்திரமாக இயங்கின...... வன்னி நாட்டின் இறுதி மன்னனான குலசேகரம் வைரமுத்து பண்டார வன்னியன் ஆட்சி புரிந்த இடம் அனேகமாக மேற்பற்று, முள்ளியவளை வன்னிமைகளாக இருக்கலாம் என நம்பப் படுகின்றது. 1803ஆம் ஆண்டு 31ஆம் திகதி கப்டன் வொண்றிபேர்க் கற்சிலை மடுவில் பண்டாரவன்னியனை தோற்கடித்தான்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.eelamview.com